பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 தை 10 சனிக்கிழமை (24-01-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:59



## வடக்கு-கிழக்கு, மலையகத் தமிழ்க் கட்சிகளை ஓரணியில் திரட்டுவதற்கு சந்திரசேகரன் முயற்சி

### புலிகளுடன் பேச்சு; ஏனைய கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்துக் கடிதம்

கிளிநொச்சி,ஜன.24

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வடக்கு - கிழக்கு, மலையகத் தமிழ்க் கட்சிகள் அனைத்தையும் ஓரணியில் திரட்டும் முயற்சி தொடர்பாக சமூக அபிவிருத்தி அமைச்சர் பெ.சந்திரசேகரன் நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இப்பேச்சுக்கள் சுமார் ஒருமணிநேரம் நீடித்தன. இது தொடர்பாகப் பேச்சு நடத்த முன்வருமாறு அவர் வடக்கு - கிழக்கின் ஏனைய கட்சிகளுக்கும் கடிதம் மூலம் அழைப்புவிடுத்திருக்கின்றார்.

கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் நேற்றுக்காலை அமைச்சர் சந்திரசேகரன் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனைச் சந்தித்தார்.

சந்திப்பையடுத்து, செய்தியாளர்களிடம் அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் தேர்தலில் தமிழ்த்தரப்பு எத்தகைய நிலைப்பாட்டை எடுக்கலாம் என்பது குறித்து நாங்கள் பேசினோம்.

எல்லாக் கட்சிகளும் தெற்கில் ஒன்றுபடும்போது சிறுபான்மைத் தமிழ்

(14ஆம் பக்கம் பார்க்க)

### உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல்

கொழும்பு,ஜன.24

ஜனாதிபதி மூன்று தடவைகள் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டமை தொடர்பான சட்ட ரீதியான தன்மையை வரைவிலக்கணம் செய்யுமாறு கோரி உயர்நீதிமன்றில் நேற்று மனு ஒன்று தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணி தர்மதாஸ இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். மனுவில் சட்டமா அதிபர் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

1994ஆம் ஆண்டின் பின்னர், ஜனாதிபதி இரண்டு தடவைகள் பதவி

(14ஆம் பக்கம் பார்க்க)

# இனவாதம் பேசுவோரை நிராகரித்து நாட்டை அழிவிலிருந்து காப்பாற்றுங்கள்

## சிங்கள மக்களிடம் தமிழ்ச்செல்வன் வலியுறுத்து

கிளிநொச்சி,ஜனவரி24



**இலங்கைத் தீவை அழிவில் இருந்து காக்க, நெருக்கடியில் இருந்து மீட்க எதிர்வரும் தேர்தலை சிங்கள மக்கள் பயன்படுத்த வேண்டும். இனவாதம் பேசுபவர்களை நிராகரித்து இந்த நாட்டில் மீண்டும் அழிவுகள் ஏற்படுவதைத் தடுக்கவேண்டிய பொறுப்பு சிங்கள மக்களுக்கு உண்டு என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் வலியுறுத்தியுள்ளார்.**

கிளிநொச்சியில் உள்ள வடக்கு - கிழக்கு அபிவிருத்தி, திட்டமிடல் செயலகத்தில் நேற்று அவர் பத்திரிகையாளர்களைச் சந்தித்துப் பேசினார். அப்போதே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

தொடர்ந்து செய்தியாளர்களின் கேள்விகளுக்கு அவர் பதிலளித்தார்.

★கேள்வி: தெற்கில் சு.க. - ஜே.வி.பி. கூட்டணி உருவாக்கம் சமாதான முயற்சிகளைப் பாதிக்குமா?

★பதில்: யுத்தநிறுத்தத்தை செம்மையாக நடைமுறைப் படுத்துகின்றோம். அதில் விசுவாசமாகவும் இருக்கின்றோம். சமாதான முயற்சிமூலம் எமது மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதில் உறுதியாகவிருக்கின்றோம். இதற்கான நம்பிக்கைகளைச் சீகுலைத்துவருகின்றது தெற்கின் சூழல்.

சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளைக்கூட சீகுலைக்க தென்னிலங்கைச் சக்திகள் துணிந்துள்ளன.

இந்நிலையில், எம்மாலும் மக்களாலும் கட்டியெழுப்பப்பட்ட அரசியல், இராணுவ பலத்தை எப்போதும் பலவீனப்படுத்த முடியாது. நாங்கள் எப்போதும் தெளிவோடும் உறுதியோடும் முன்னெச்சரிக்கையோடும் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கின்றோம். இதைச் சீகுலைக்க தென்னிலங்கைச் சக்திகள் ஒன்றுபட்டு முன்வந்தால், அதை எதிர்கொள்ள தமிழ்த் தேசியம் எழுச்சிபெறவேண்டும். தெற்கு அரசியல் நிலை நாளுக்குநாள் மாறுவதால் எதையும் உறுதியாகக் கூற முடியாது.

அடுத்தவாரத்தில் வெளிநாட்டுக்குச் செல்லவிருக்கின்றோம். அப்போது சந்திக்கும் வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு எமது நிலைப்பாடு குறித்தும தெற்கு அரசியல் நிலை குறித்தும் விளக்கமளிக்கவுள்ளோம்.

★கேள்வி: சு.கட்சி - ஜே.வி.பி. கூட்டணி ஆட்சிக்கு வந்தால் அக்கூட்டணியுடன் பேச்சு நடத்துவீர்களா?

★பதில்: தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளை, கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு, தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வொன்றை முன்வைக்கின்ற உறுதிப்பாட்டோடு அதற்காக மக்கள் ஆணையைப் பெற்றுவருகின்ற அரசியல் தலைமையுடன் நாம் பேசுவோம். ஜே.வி.பியோ, சுதந்திரக் கட்சியோ எம்மக்களின் உரிமைப் போராட்டத்தையோ, உரிமைக்கான குரலையோ அபிலாஷைகளையோ கொச்சைப்படுத்தி, அதை மறுதலித்துக்கொண்டு சமாதானம் குறித்துப்பேச முன்வருவார்களேயானால் சமாதானம் கேள்விக்குறியாகவேதான் இருக்கும்.

தமிழ் மக்களின் எதிர்காலம், நலன்கள் என்ற அடிப்படையில்தான் விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக எந்த முன்னெடுப்புக்களையும் செய்வார்கள். தவிர, தமிழ் மக்களின் நலன்களுக்கு எதிரானவர்களுடன் பேசுவதில் பயன் ஏதும் ஏற்படப்போவதில்லை. இதை அடிக்கடி

(14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் பொறுப்புணர்ச்சியுடன் நடக்கின்றனர் எனப் பாராட்டு

### ஜனாதிபதி தெரிவித்தார்

கொழும்பு,ஜன.24

"மூன்று அமைச்சுக்களை நான் பொறுப்பேற்றவுடன், அமைச்சர்கள் உட்பட அரச தரப்பினர் பலர் வன்னிக்குச் சென்று, யுத்தத்தை மீண்டும் ஆரம்பிக்கும் படியும், ஏ - 9 பாதையை இழுத்து மூடிவிடுமாறும் புலிகளிடம் கோரிக்கை விடுத்தனர். ஆனால், புலிகள் அதை ஏற்கவில்லை. அதை நிராகரித்து மிகுந்த பொறுப்புணர்வுடன் நடந்துகொண்டனர். இந்த அடிப்படையிலேயே அவர்கள் தொடர்ந்தும் தமது நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்கின்றார்கள். இதனை நான் பாராட்டுகின்றேன்."

- இப்படித் தெரிவித்துள்ளார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

'ரூபவாஹினி'யில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பதவியிலிருக்கும் எந்தவொரு அரசுடனும் பேச்சு நடத்துவதற்கு தாம் தயார் என்று விடுதலைப் புலிகள் தொடர்ந்து அறிவித்து வந்துள்ளனர்.

மூன்று அமைச் சுக்களையும் நான பொறுப்பேற்றதைத் தொடர்ந்து சில அமைச்சர்களும் மற்றும் பலரும் வன்னிக்கு ஓடிச்சென்று மீண்டும் போராட்டத்தை ஆரம்பிக்கும்படியும், ஏ-9 பாதையை மூடிவிடும்படியும் புலிகளிடம் கோரிக்கை விடுத்தனர். இவற்றை நான் அறிவேன்.

இருந்தபோதிலும், விடுதலைப் புலிகள் மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொண்டுள்ளனர். இதனைத்

(14ஆம் பக்கம் பார்க்க)

## மட்டுவிலில் சுடப்பட்ட இளைஞர் நல்லூரைச் சேர்ந்த வான் சாரதி!

### 12 நாள்களின் பின் சடலத்தை உறவினர் அடையாளம் காட்டினர்

யாழ்ப்பாணம்,ஜன.24

தென்மராட்சி, மட்டுவில் பகுதியிலிருந்து கடந்த 10 ஆம் திகதி சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்ட இளைஞர் அடையாளம் காணப்பட்டிருக்கிறார்.

நல்லூர் முத்திரைச்சந்தை, செம்மணி வீதியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் விநோதன் (வயது 21) என்பவரின் சடலமே அது என்று அவரது தந்தையார் நேற்று அடையாளம் காட்டினார்.

கடந்த 12 தினங்களாக யாழ். ஆஸ்பத்திரிப் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த அச்சடலம், பொலீஸ் விசாரணைகளின் பின்னர் நேற்று மாலை உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

மினிவான் சாரதியான பிரஸ்தாப இளைஞர் கொழும்பு - யாழ்ப்பாணம் இடையே மினிவான் சேவையை நடத்திவந்தார் என்று கூறப்படுகிறது.

சிலநாள்களாக கொழும்பில் தங்கியிருந்த இவர், கடந்த 9 ஆம் திகதி

(14ஆம் பக்கம் பார்க்க)

## புலமைப்பரிசில் பெறுபேறுகளில் யாழ். இந்து ஆ.பா. முன்னணி

யாழ்ப்பாணம்,ஜன.24

தரம் ஐந்து புலமைப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகி உள்ளன. சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கையில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை முன்னணியில் திகழ்கின்றது. ஜோன் பொஸ்கோ பாடசாலையைச் சேர்ந்த பி.விதூஷன் 172 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.

யாழ். மாவட்டத்துக்கான வெட்டுப் புள்ளி 118. மட்டக்களப்பு, வவுனியா, அம்பாறை மாவட்டங்களின் புள்ளியை விடவும் இது குறைவானதாகும்.

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 46 வீதத்தினர் சித்தியடைந்துள்ளனர்.

பரீட்சைக்குத் தோற்றிய 235 மாணவர்களில் 108 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

ஜோன் பொஸ்கோ பாடசாலையில் இருந்து பரீட்சைக்குத் தோற்றியோ

(14ஆம் பக்கம் பார்க்க)

**மாவட்டத்தில் முதல் இடங்களைப் பெற்ற மாணவர்களின் விவரங்கள்**

| | | | |
|---|---|---|---|
| பி.விதூஷன் | - | 173 | ஜோன் பொஸ்கோ கல்லூரி |
| ஜே.ஏ.வசந்தன் | - | 171 | ஜோன் பொஸ்கோ கல்லூரி |
| பி.யதுர்ஷனன் | - | 171 | யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை |
| கே.பிரசாந்தன் | - | 171 | மானிப்பாய் சோதிவேம்படி |
| பி.திலக்ஷி | - | 171 | கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி. |
| பி.மிதுரிகா | - | 169 | யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை |
| பி.கீர்த்திகா | - | 167 | உடுவில் மகளிர் கல்லூரி |
| பி.நிலக்ஷி | - | 167 | வதிரி திருஇருதயக் கல்லூரி |



### உள்ளூராட்சி சபைகளுக்கு

## அம்பாறை முஸ்லிம் பகுதிகளிலும் தேர்தல் நடக்காது! ஒத்திவைப்பு!!

### அமைச்சர் கரு ஜயசூரிய அறிவிப்பு

கொழும்பு,ஜன.24

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச முஸ்லிம் பகுதிகளின் உள்ளூராட்சி சபைகளுக்கு மட்டும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருக்கும் தேர்தல் நடைபெறமாட்டாது. அத்தேர்தல் மீண்டும் பின்போடப்படும் என்று எரிசக்தி, மின்வலு அமைச்சர் கரு ஜயசூரிய நேற்று அறிவித்தார்.

இத்தேர்தலைப் பின்போடுவதற்கு தேர்தல் ஆணையாளர் இணக்கம் தெரிவித்திருக்கிறார் எனவும் அவர் கூறினார்.

தேர்தல் மறுசீரமைப்புத் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் இடைக்கால அறிக்கை தொடர்

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# ஜனாதிபதியின் சத்தியப்பிரமாணம் குறித்து உயர் நீதிமன்றம் கருத்துத் தெரிவிக்க முடியாது

## அரசமைப்பில் அதுபற்றி உள்ளது என்கிறார் அமைச்சர் லொக்குபண்டார

கொழும்பு,ஜன.24

ஜனாதிபதி மூன்று தடவைகள் சத்தியப்பிரமாணம் செய்தது தொடர்பாக உயர் நீதிமன்றம் கருத்து எதுவும் தெரிவிக்கமுடியாது. அரசியலமைப்பின் 42ஆவது சரத்தில் ஜனாதிபதியின் கடமைகள், அதிகாரங்கள், நடந்துகொள்ள வேண்டிய முறைகள் பற்றி தெளிவாகக் கூறப்பட்டுள்ளது என்று சபை முதல்வர், அமைச்சர் டபிள்யூ. ஜே.எம்.லொக்கு பண்டார நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை கூடியபோது வாய்மூல பதில்களுக்கான கேள்வி நேரம் இடம்பெற்றது. இச்சந்தர்ப்பத்தில் அமைச்சர் ரி.மகேஸ்வரன் எழுந்து இந்த நாட்டின் ஜனாதிபதி யார்? இரண்டு தடவையே பதவி வகிக்க வேண்டிய ஜனாதிபதி மூன்று தடவைகள் சத்தியப்பிரமாணம் செய்துள்ளார். இது சட்ட விரோதமானது. இது குறித்து சபாநாயகர் விளக்கமளிக்க வேண்டும் என்று கூறினார்.

சபாநாயகர்:- அமைச்சரே, கேள்விகளை முறைப்படி சமர்ப்பித்து எழுப்ப வேண்டும். எனவே முறையாக கேள்வியை எழுப்புங்கள். உங்களது பேச்சு நாடாளுமன்றத்தில் பதிவாகாது.

அநுரகுமார திசாநாயக்க (ஜே.வி.பி.):- அமைச்சரே, இது தொடர்பாகத் தெளிவாகத் தெரிந்துகொள்ள உயர் நீதிமன்றத்துக்குச் செல்லுங்கள்.

இச்சந்தர்ப்பத்திலேயே சபை முதல்வரும் அமைச்சருமான டபிள்யூ.ஜே. எம்.லொக்குபண்டார ,மேற்கண்டவாறு பதிலளித்தார்.

# தேர்தல் திருத்தச் சட்டம் பெப். 3இல் சமர்ப்பிப்பு

சகல மாகாண சபைகளினதும் தேர்தல்களை ஒரே தினத்தில் நடத்த வழி செய்யும் மாகாண சபைகள் தேர்தல்கள் திருத்தச்சட்டத்தை எதிர்வரும் 3ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற கட்சித்தலைவர்களின் கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

# ஊவா மாகாண சபைக் கூட்டம் அமளிதுமளியால் ஒத்திவைப்பு!

## ஆளும்தரப்பு – எதிர்க்கட்சி பலத்த வாக்குவாதம்

பதுளை,ஜன.24

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக வரைவை ஆட்சேபித்தும், ஐக்கிய தேசியக்கட்சியின் நடவடிக்கையைக் கண்டித்தும் ஊவா மாகாண சபையின் ஜே.வி.பி. அங்கத்தவர் சமந்த வித்தியரட்ன தெரிவித்த கருத்துக்களால் நேற்று ஊவா மாகாண சபையில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டு சபை இடைநிறுத்தப்பட்டது.

சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று பிரதித் தலைவர் ஏ.ஏ.சிறிசேனவின் தலைமையில் ஆரம்பமாகியது. அப்போது ஜே.வி.பி. உறுப்பினர் தெரிவித்த கருத்தால் ஆளும்கட்சி, எதிர்க்கட்சி (ஐ.தே.க.) உறுப்பினர்களிடையே வாக்குவாதங்கள் மூண்டன. இதனால், சபையை நடதத முடியாது பிரதித் தலைவர் சபையை ஒத்திவைத்தார்.

அவ்வேளை, சபையின் எதிர்க்கட்சித் தலைவர் முனிரட்ண ஏக்கநாயக்கா சபையை தான் நடத்துவதாக எழுந்து தலைவரின் ஆசனத்திற்கு அருகே சென்றார். உடனே ஆளுங்கட்சித் தரப்பினர் எழுந்து சென்று அவரைத் தடுத்து நிறுத்தினர். ஆசனத்தில் அமர்ந்தால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்று ஆளுங்கட்சியினர் கோஷமிட்டனர்.

அப்படி என்றால் உங்கள் தலைவரை வந்து சபையை நடத்தச் சொல்லுங்கள். எதற்கு அஞ்சி ஓட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ஆக்ரோஷமாகக் கூறினார்.

## நகரசபைத் தலைவர் பதவி விவகாரம்:

# அரசுக்கு எதிரான பதாகைகளை ஏந்தி புத்தளத்தில் மு.கா. நேற்று ஆர்ப்பாட்டம்

முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் நேற்றுப் பிற்பகல் புத்தளம் நகரில் ஒன்றுகூடி அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினார்கள். ஜும் ஆ தொழுகையின் பின்னர் நகர பெரிய பள்ளிவாசல் அருகில் ஒன்று திரண்ட மு.கா. ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

புத்தளம் நகரசபையின் தலைவர் பதவி முஸ்லிம் காங்கிரஸுக்கு வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்படுவதைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. புத்தளம் மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் மத்திய குழு ஆர்பாட்டத்துக்கான ஏற்பாட்டைச் செய்திருந்தது.

"முஸ்லிம் காங்கிரஸை அழிக்க ஐ.தே.முன்னணி சதியா...?"

"முஸ்லிம் காங்கிரஸே அரசியலிலிருந்து வெளியேறு!"

ஐக்கிய தேசிய முன்னணியிடம் பிச்சை கேட்கவில்லை. உரிமையையே கேட்கிறோம்!"

"பங்காளிப்பட்டத்தை உடனே வாபஸ் பெறு"

"புத்தளம் நகர சபையைப் பாதுகாக்க முடியாத பிரதமர் எப்படி நாட்டைக் காப்பார்...?"

"ஐ.தே.முன்னணியுடன் உறவும் வேண்டாம்! தொடர்பும் வேண்டாம்!" என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகள் ஆர்ப்பாட்டக்காரர்கள் தாங்கிருந்தனர்.

புத்தளம் நகர சபைத் தலைவராக இருந்த ஏ.எம்.எச்.ஹுசைன் (மு.கா.) சுகவீனம் காரணமாக தனது பதவியை இராஜினாமா செய்ததையடுத்து ஐ.தே. முன்னணியைச் சேர்ந்த குலின்டன் ஜோசப் பதில் தலைவராக நியமனம் செய்யப்பட்டார். அப்பதவி விரைவில் முஸ்லிம் காங்கிரஸுக்கு வழங்கப்படும் என்று அரசு உறுதிமொழி வழங்கியிருந்தது. ஆயினும், உறுதிமொழி இன்னமும் நிறைவேற்றப்படவில்லை.

இவ்விவகாரம் குறித்துப் புத்தளம் பிரதேச சபை உறுப்பினர் எஸ். எச்.எம்.நியாஸ் (மு.கா.) கருத்துத் தெரிவிக்கும்போது, உடனடியாக முஸ்லிம் காங்கிரஸ் அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசிலிருந்து வெளியேற வேண்டும்!" - என்றார்.

### உதவும் நாடுகள் கூட்டம்

இலங்கைக்கு உதவி வழங்குவதற்கு உறுதியளித்த நாடுகள் மற்றும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் நேற்று கொழும்பில் ஒன்று கூடிப் பேச்சு நடத்தினர்.

7 உதவி வழங்கும் நிறுவனங்களும் பலநாடுகளும் இதில் பங்கேற்றன. யப்பானிய சிறப்புத் தூதுவர் யசூசி அகாஷி இக்கூட்டத்துக்கு தலைமை தாங்கினார்.

### 26 நள்ளிரவு முதல் ரயில்வே ஊழியர்கள் வேலைநிறுத்தம்

ரயில்வே அதிகார சபையை ஒழித்து... கக்கோரி 30 ரயில்வே தொழிற்சங்கங்கள் எதிர்வரும் 26ஆம் திகதி நள்ளிரவு முதல் வேலைநிறுத்ததில் ஈடுபடவிருக்கின்றன.

அதிகாரசபையை ஒழித்து விட்டு புதிய நிருவாகத்தின் கீழ் ரயில்வே திணைக்களத்தை ஏற்படுத்துமாறு கோரி இச்சங்கங்கள் முன்னர் 48மணி நேர வேலை நிறுத்தத்தை மேற்கொண்டன.

அந்த வேலை நிறுத்தத்தின் போது தொழிற்சங்கங்களுடன் பேச்சு நடத்திய போக்குவரத்து அமைச்சர் திலக் மாரப்பன ரயில்வே ஊழியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற இரண்டு மாதகால அவகாசம் கோரியிருந்தார்.

இரண்டு மாதங்கள் கழிந்துவிட்டபோதிலும் சாதகமான பதில் கிடைக்காததாலேயே தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தில் ஈடுபடவிருக்கின்றன.

## கோப்பாய், இருபாலை, அச்சுவேலி பகுதிகளுக்கான

# குடிதண்ணீர் விநியோகத்தை விஸ்தரிக்க ரூ. 1 கோடி ஒதுக்கீடு

கொக்குவில்,ஜன.24

கோப்பாய், இருபாலை மற்றும் அச்சுவேலி ஆகிய பிரதேசங்களில் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வரும் குடிதண்ணீர் விநியோகத்தை மேலும் விஸ்தரிப்பதற்கு தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஒரு கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த நிலாவரைக் கிணற்றையும் அதனை உள்ளடக்கிய காணியையும் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு வழங்குமாறு அதன் யாழ். பிராந்திய முகாமையாளர் வலி. கிழக்கு பிரதேச சபையிடம் கேட்டுள்ளார்.

இதேவேளை -

வாதரவத்தை, பொக்கணை மற்றும் வீரவாணி ஆகிய பிரதேச மக்களின் குடிதண்ணீர் பற்றாக்குறையைப் போக்குவதற்கு நிலாவரைக் கிணற்றில் இருந்து குடிதண்ணீர் விநியோகிக்க நடவடிக்கை எடுக்குமாறு மேற்படி பிரதேச மக்கள் யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

மேற்படி பிரதேச மக்களுக்குத் தற்பொழுது விநியோகிக்கப்பட்டு வருகின்ற குடிதண்ணீர் போதுமானதாக இல்லாமையால் நிலாவரைக் கிணற்றில் இருந்து அதனை விநியோகிப்பதன் மூலம் தட்டுப்பாட்டை ஓரளவிற்கு நிவர்த்தி செய்யமுடியும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ம-10-76)

### ஆங்கில வகுப்புகள்

யாழ்ப்பாணம்,ஜன.24

திறந்த பல்கலைக்கழக தொழில்சார் அடிப்படை ஆரம்பதாரர்களுக்கான (Professional Basic Beginner's) ஆங்கில வகுப்புகள் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய அலுவலகத்தில் ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# 'ஸ்பிரிட்' கலத்துடன் தொடர்பு துண்டிப்பு; செவ்வாய் ஆய்வில் பின்னடைவு!

## ஒப்பர்சூனிட்டி இன்று தரையிறங்கும்

வாஷிங்ரன்,ஜன.24

செவ்வாய்க் கிரகத்தில் தரையிறங்கி ஆராய்ச்சி நடத்தி வந்த 'ஸ்பிரிட்' ஆய்வுக்கலத்துடனான தொடர்பு திடீரெனத் துண்டிக்கப்பட்டிருக்கிறது. இது விஞ்ஞானிகளுக்கு கவலை அளித்திருக்கிறது.

இருப்பினும், பூமியில் இருந்து ஆய்வுக்கலத்திற்கு சமிக்ஞைகள் அனுப்பப்பட்டு வருகின்றன. ஆனால், அதற்கு பதில் கிடைக்கவில்லை. எனவே, ஆய்வுக் கலம் செயலிழந்திருக்கலாம் என்று நாஸா கூறியுள்ளது.

"செவ்வாயில் தண்ணீர் உள்ளதா? என்பதை ஆராயும் முக்கிகட்டத்தில் ஆய்வுக்கலத்துடனான தொடர்பு துண்டிக்கப்பட்டிருக்கிறது" என்று நாஸா ஆய்வு மையத்தின் இயந்திரப் பிரிவுப் பணிப்பாளர் போர்ட் தெய்ஷிங்கர் தெரிவித்திருக்கிறார்.

எனினும், ஆய்வுக்கலத்துடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கு விஞ்ஞானிகள் போராடி வருகின்றனர்.

ஜி.எம்.ரி. நேரப்படி நேற்று முன்தினம் 3.02 இற்கு ஆய்வுக்கலத்துடனான தொடர்பு துண்டிக்கப்பட்டது. கடந்த 24 மணித்தியாலங்களாக அதனுடன் தொடர்பை ஏற்படுத்த முயன்றும், விஞ்ஞானிகள் அதில் தோல்வியடைந்துள்ளனர்.

ஆய்வுக்கலத்திற்கு மிகவும் பாரதூரமான விளைவு ஏற்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது. அதாவது, அது திடீரென செயலற்றுப்போய்விட்டதாகக் கருதவேண்டியுள்ளது என்று நாஸா தெரிவித்துள்ளது.

அத்துடன், தொடர்ச்சியான மழை பெய்வதால் சமிக்ஞைகள் அனுப்பப்படும் கான்பெரா விண்வெளி ஆராய்ச்சி நிலைய அன்ரெனாவிலிருந்து சமிக்ஞைகளைத் தொடர்ந்தும் அனுப்ப முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது என்று ஜெனிபர் டி ரோஸ்பர் என்ற விஞ்ஞானி தெரிவித்திருக்கிறார்.

செவ்வாயில் தரையிறங்கி 18 நாள்களைக் கடந்திருந்த நிலையில் - முக்கியமான காலகட்டத்தில் - ஆய்வுக்கலத்துடனான தொடர்பு துண்டிக்கபட்டிருக்கிறது. அங்குள்ள 'அடிரோண்டாக்' என்ற பாறாங்கல்லை துளையிட்டு ஆராய்ச்சி செய்தபோதே, ஆய்வுக் கலத்துடனான தொடர்பு துண்டிக்கப்பட்டது என்று கூறப்படுகிறது.

சுமார் 4000 கோடி ரூபா செலவில் தயாரிக்கப்பட்ட இந்த ஆய்வுக் கலத்தின் இயக்கம், இத்துடன் நின்றுவிடும் சாத்தியமும் உண்டு என்று நாஸா கவலை தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, நாஸா அனுப்பிய மற்றொரு அய்வுக்கலமான 'ஒப்பர்சூனிட்டி' இன்று செவ்வாயில் தரையிறங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜி.எம்.ரி. நேரப்படி 5.05 இற்கு அது செவ்வாயின் வடபுலத்தில் தரையிறங்கும் என்று நாஸா அறிவித்திருக்கிறது. ஒப்பர்சூனிட்டி தரையிறங்கவுள்ள இந்நிலையில், ஸ்பிரிட்டின் தொடர்பு துண்டிக்கப்பட்டிருப்பது செவ்வாய்க் கிரக ஆராய்ச்சியில் நாஸாவுக்கு ஏற்பட்ட முதல் கட்டப் பின்னடைவு என்று தெரிவிக்கப்படுகிறது.



ஸ்பிரிட் ஆய்வுக் கலத்துடன் தொடர்பை ஏற்படுத்த முயற்சிக்கும் நாஸா விஞ்ஞானிகள்

# திருமண மண்டபத்தில் தீவிபத்து; மணமகன் உட்பட 51 பேர் பலி!

## திருச்சி நகரில் விபரீதம்

ஸ்ரீரங்கம்,ஜன.24

தமிழகத்தின் திருச்சி நகரில் உள்ள ஸ்ரீரங்கம் பகுதியில் கல்யாண மண்டபம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் மணமகன் உட்பட 51 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்; நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

நேற்றுக்காலை ஸ்ரீரங்கத்தில் உள்ள ஒரு திருமண மண்டபத்தில் இச்சோக சம்பவம் நடந்தது.

திருமண மண்டபத்தின் உள்ளே திருமணச்சடங்கிற்காகக் கற்பூரம் காட்டப்பட்ட பின்னர் எரிந்துகொண்டிருந்த கற்பூரத்தை கவனக்குறைவாக வீசியதாலேயே தீப்பற்றியதாகக் கூறப்படுகிறது. தீ பெரியளவில் எரிந்ததன் காரணமாக திருமணத்திற்கு வந்தவர்கள் உடனடியாக வெளியேற இயலவில்லை. இச்சம்பவத்தில் மணமகன் உட்பட 51 பேர் அதே இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும், நூறுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

அதிஷ்டவசமாக மணப் பெண்ணை அவரது உறவினர் ஒருவர் காப்பாற்றினார்.

மண்டபத்தின் மேற்கூரை தென்னை மற்றும் பனை ஓலைகளால் வேயப்பட்டிருந்ததால் தீயை உடனடியாக அணைக்க இயலவில்லை என்று கூறப்படுகிறது.

எனினும், மின்கசிவு காரணமாக இச்சம்பவம் ஏற்பட்டிருக்கலாம் என்று பொலீஸ் தரப்பில் கருதப்படுகிறது.

இச்சம்பவத்தையடுத்து ஸ்ரீரங்கம் நகரம் முழுவதுமுள்ள தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டனர். அவர்கள் வெகுநேரம் போராடித் தீயை அணைத்தனர்.

காயமடைந்தோர் அனைவரும் திருச்சி மற்றும் ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### தி.மு.க. - பா.ம.க. உடன்படிக்கை

சென்னை,ஜன.24

இந்தியாவில் நடைபெற உள்ள நாடாளுமன்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிட பா.ம.கவுக்கு 6 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இது தவிர இவ்வாண்டு நடைபெறவுள்ள மாநிலங்களவைத் தேர்தலில் ஓர் உறுப்பினர் பதவியும் அளிக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இதற்கான தொகுதி உடன் பாட்டில் தி.மு.க. தலைவர் கருணாநிதி பா.ம.க. தலைவர் ராமதாஸ் ஆகிய இருவரும் நேற்று கையெழுத்திட்டனர்.

# ஈரானில் மீண்டும் நிலநடுக்கம்!

தெஹ்ரான்,ஜன.24

ஈரான் நாட்டின் பாம் நகரில் கடந்த டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் பலியானார்கள். லட்சக் கணக்கான மக்கள் வீடுகளை இழந்து தவித்தனர். இதன் மீட்புப்பணி இன்னும் முடியவில்லை. இந்த நிலையில் தென்கிழக்கு ஈரான் பகுதியில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இங்குள்ள சராதுபியாக் நகரிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவுகோலில் 4.9 அளவுக்குப் பதிவாகியிருந்தது.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

மலர்வு 07 - 09 - 1921



உதிர்வு 25 - 12 - 2003

## அமரர் வேலுப்பிள்ளை தம்பிராசா

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)

திதி: துதியை

*மாதம் ஒன்றாயினதோ மாண்புருவே உந்தனுக்கு*
*மண்ணுலகைப் பிரிந்தவரே மாதவனே உந்தனுக்கு!*
*நாதம் ஒலித்தோய்ந்ததுவோ நாயகனே இன்றெமக்கு*
*நன்மை இனி ஏதுமில்லை நாடி உம்மை நின்ற எமக்கு*
*கீதம் ஒழிந்ததுவோ குடும்பமதில் இன்றெமக்கு*
*கீர்த்தி புகழ் மறைந்ததுவோ கேசவனே இனியெமக்கு*
*வேதம் தான் உன்வாக்கு என்றென்றும் எங்களுக்கு!*
*வேழமுகத்தான் தாள் வேண்டி வணங்கிடுவோம் உங்களுக்காய்.*

**இன்று (24-01-2004) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற, அன்னாரின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்விலும், மதியபோசனத்திலும் கலந்துகொண்டு அமரரின் ஆத்மசாந்திக்காய் பிரார்த்திக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி. மக்கள். மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.

*வெள்ளாம்போக்கட்டி,*
*கொடிகாமம்.*
(சி-32595) (19-16-17-32)

---

**உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)**

# பதவி வெற்றிடம்

**பொதுமுகாமையாளர் - குறியீட்டு இல:101/05.**

மேற்குறிப்பிட்ட பதவிக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பத்தினை சங்கக் காரியாலயத்தில் பெற்று பூர்த்திசெய்து *"தலைவர், உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், இமையாணன், உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை"* என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ 06. 02. 2004 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிக்குப் பிந்தாது கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படவேண்டும். விண்ணப்பத்தின் தபால் உறையில் இடதுபக்க மேல்மூலையில் *"பொதுமுகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்"* எனக் குறிப்பிடல் வேண்டும்.

| | |
|---|---|
| **பதவி** | : பொதுமுகாமையாளர் |
| **சம்பளக்குறியீட்டு எண்** | : 101/05-165/88-101-(03)(165/88) |
| **சம்பள அளவுத்திட்டம்** | : 6500-9900 |
| | ------------- |
| | 160x10+180x10 |

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:**

01) கூட்டுறவுப் பணியாளர் 06 ஆவது சம்பளத்திட்டத்தில் 03 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 07 ஆவது சம்பள திட்டத்தில் முகாமைமட்ட அல்லது மேற்பார்வை மட்ட பதவி ஒன்றில் 06 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது,

02) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரிச் சான்றிதழ அல்லது அதற்குச் சமமான தகைமைகளுடன் முகாமைமட்ட பதவி ஒன்றில் 10 வருட அனுபவமும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றின் சிரேஷ்ட முகாமைப்பதவியில் 3 வருட அனுபவமும்.

அல்லது,

03) கூட்டுறவு ஊழியர் தராதரப்பத்திரம் உயர்தரச் சான்றிதழ்/க. பொ. த. உயர்தரம் 03 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமைமட்ட பதவி ஒன்றில் 12 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

வயதெல்லை: 21 தொடக்கம் 50 வரை (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது)

பிணை: ரொக்கம் ரூபா 25000/- உடன் ஆதனம் ரூபா 50000/- பெறுமதியானது செலுத்தப்படல் வேண்டும்.

பதவி நிரந்தரமானதும் 02 வருடங்கள் தகுதிகாண் காலத்தைக் கொண்டதுமாகும்.

நிபந்தனைகள:

01) நிறுவனங்களில் தற்போது கடமையாற்றுபவர்கள் நிறுவனத்தினூடாகவே சிபார்சுசெய்து விண்ணப்பிக்கவேண்டும்.

02) விண்ணப்பப்படிவத்துடன் கல்விச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ் அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்களின் பிரதி என்பன இணைக்கப்பட வேண்டும்.

03) பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பப் படிவங்களும், சான்றிதழ் இணைக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்களை ஏற்கவோ, நிராகரிக்கவோ நெறியாளர் குழுவுக்கு உரிமையுண்டு.

★ பிற்குறிப்பு: தகுதியில்லாத விண்ணப்பங்கள் கிடைக்குமிடத்தும் அவசியத்தின் அடிப்படையிலும் ஆளணி மீளாய்வுக்குட்படுத்தப்பட்டு பொருத்தமான சம்பள அளவுத்திட்டத்திலும் பதவியை நிரப்புவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நெறியாளர் குழுவின் ஆணைப்படி,
(வெ.தர்மகுலசிங்கம்)
தலைவர்.

உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம்,
உடுப்பிட்டி.
(C/32600)(34-16-17-32)

---

## தேங்காய் வீழ்ந்து சிறுவன் காயம்!

யாழ்ப்பாணம்,ஜன.24

முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் தலையில் தேங்காய் விழுந்து காயமடைந்தான்.

மீசாலை மேற்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் பேரம்பலம் ரமேஷ் (வயது 8) என்ற சிறுவனே காயமடைந்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். (ஒ-15)

## ஓட்டுமடம் தேவாலயத் திருவிழா

ஓட்டுமடம் புனித செபஸ்தியார் ஆலயத் திருவிழா இன்று சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு திருப்பலியுடன் ஆரம்பமாகி திருச்செருபப் பவனியும், ஆசீரும் இடம்பெறும்.

## ஆடைத்தயாரிப்பு பயிற்சிக்கு ஆள்சேர்ப்பு

யாழ்ப்பாணம்,ஜன.24

யாழ்.மாவட்டத்தில் வேலை வாய்ப்பின்றி வாழ்கின்ற இளைஞர், யுவதிகளுக்கு தொழிற்றுறைத் திணைகளத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தினால் தொழிற்பயிற்சி வழங்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன்படி நவீனஆடை தயாரிப்பு நிறுவனம் ஒன்றுக்கான பயிற்சியாளர்களைத் தெரிவு செய்யும் நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு சுன்னாகத்தில் உள்ள ராஜா கட்டடத்தொகுதியில் நடைபெறவுள்ளது.

இதற்கான அனுமதிக்கடிதங்கள் சகல விண்ணப்பதாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் விண்ணப்பதாரிகளை அன்றைய தினம் தகைமைச் சான்றிதழ்களுடன் நேர்முகப் பரீட்சைக்குச்சமுகமளிக்குமாறும் தொழிற்துறைத்திணைக் களத்தின் யாழ்.மாவட்ட அலுவலர் ப.ராகவன் அறிவித்துள்ளார். (ஐ-10)

## வயோதிபர் குறித்து தகவல் தருமாறு வேண்டுகோள்

தென்மராட்சி,ஜன.24

கொடிகாமம் சந்தையில் ஐந்து நாள்களாக உடல் நலம் குன்றிய நிலையில் தங்கிருந்த ஆதரவற்ற வயோதிபரை அப்பகுதி கிராம அலுவலர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதித்துள்ளார்.

இந்த வயோதிபர் கோப்பாய் தெற்கைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுவதால் இவரது உறவினர்களை சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு வருகை தருமாறு ஆஸ்பத்திரியின் பொறுப்பதிகாரி கேட்டுள்ளார்.(ஒ-117)

## மதுவரி ஊழியர் விளையாட்டு விழா

வடமாகாண மதுவரித்திணைக்கள உத்தியோகத்தர்களுக்கிடையேயான வருடாந்த விளையாட்டு விழா. இன்று சனிக்கிழமை காலை 8மணி முதல் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண மதுவரித்திணைக்கள அலுவலர் விளையாட்டுச் சங்கத்தின தலைவர் எஸ்செந்தூர் செல்வம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பிரதேச செயலர் எஸ்.செந்தில்நந்தனனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண பிரதேச செயலக திட்டப்பணிப்பாளர் மகேஸ்வரன், யாழ்.மாவட்ட உதவி மதுவரி ஆணையாளர் பி.கிறிஸ்ரி யோசப்பு ஆகியோரும் கலந்து கொள்வர். (ஒ-5)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.24

அமரர் க.சுந்தரம் ஞாபகார்த்தமாக உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று இரவு 7மணிக்கு மின்னொளியில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு-

★ இரவு 7.மணி - உடுப்பிட்டி நவஜீவன்ஸ் வி.க. அணி எதிர் கூவல் தீபஜோதி வி.க.

★ இரவு 7.30மணி - வண்ணார் பண்ணை வள்ளுவன் வி.க.எதிர் நவிண்டில் கலைமதி வி.க.

★ இரவு 8மணி- வண்ணார் பண்ணை பவானி வி.க எதிர் உடுப்பிட்டி சுப்பர்ஸ்ரார் வி.க.

★ இரவு 8.30மணி - கம்பர் மலை - யங்கம்பன்ஸ் வி.க எதிர் சிறுப்பிட்டி ஜனசக்தி வி.க. (ஒ-5)

---

# கண்ணீர் அஞ்சலி

**21.01.2004 அன்று இறைபதமடைந்த க.நாகேசன் (குணம்) அவர்களின் அன்பு மாமனார்**

**அமரர் சின்னையா மார்க்கண்டு**

**அவர்களின் பிரிவால் துயருறும் அவர்தம் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

க.நடேசன் (பூவா),
உரிமையாளர்.
மயூரா தச்சுத்தொழிற்சாலை.

*மானிப்பாய்.* (27556)(32-16-17-32)

---

# துயர் பகிர்கின்றோம்

எமது வங்கியில் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமைபுரிந்தவரான எமது சக ஊழியர்

## பரராசசிங்கம் திருநாவுக்கரசு

அவர்கள் இயற்கையெய்தியமை குறித்து நாம் பெரிதும் துயரடைகின்றோம். இவரது மறைவால் துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினரின் துயரை நாமும் பகிர்ந்துகொண்டு ஆத்மா சாந்தி அடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- முகாமையாளர், சக ஊழியர்,
இலங்கை வங்கி, அச்சுவேலி.

(27549)(34-16-17-32)

---

# கண்ணீர் அஞ்சலி

**எமது வங்கியில் பாதுகாப்பு**
**உத்தியோகத்தராகக் கடமையாற்றிய**
**ப.திருநாவுக்கரசு அவர்களின்**
**திடீர் மறைவினால் துயருற்றிருக்கும்**
**அவரது குடும்பத்தினருக்கு**
**எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவிப்பதோடு,**
**அன்னாரது ஆத்மா சாந்தியடைய**
**எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.**

**முகாமையாளர் , சக ஊழியர்,**
**இலங்கை வங்கி,**
**சுன்னாகம்.** (27548) (12-16-17-32)

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராமாசிப்பிள்ளை செல்லையா

சுன்னாகம், மலைப்பையைப் பிறப்பிடமாகவும் தையிட்டிபுலம் தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராமாசிப்பிள்ளை செல்லையா கடந்த 22.01.2004 வியாழக்கிழமை புத்தளத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு செல்லையாவின் அன்பு மனைவியும் வேலாயுதபிள்ளை (R.M.P.புத்தளம்), திருமதி இராணிரத்தினம் (இரத்தினபுரி), யோகநாதன் (சுன்னாகம்), சிதம்பரநாதன் (சங்கானை), கதிர்காமநாதன் (உ.அ. அதிபர் பணிமனை உடுவில்), சோதிநாதன் (விளான்), திருமதி இந்திராணி (கிளிநொச்சி), திருமதி பவளராணி (யாழ்ப்பாணம்), இராமநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி செந்திரு (முனனாள் பதிவாளர், சுழிபுரம்), குகதாசன் (R.M.P.இரத்தினபுரி), திருமதி செல்லாச்சிப்பிள்ளை, திருமதி சாந்தினி, திருமதி நல்லநாயகி, திருமதி பவளமலர், சுடர் (புனர்வாழ்வுப் பகுதி - கிளிநொச்சி), பாலசுந்தரம் (கிராம உத்தியோகத்தர், பளை), திருமதி வசந்தா (பாப்பா - சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும் சின்னத்துரை, காசிநாதா, செல்லையா (கிளிநொச்சி), திருமதி அன்னபாக்கியம் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24-01-2004) சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன்: டாக்டர் வேலாயுதபிள்ளை,
மகன்: கதிர்காமநாதன் (பப்பா),
மருமகன்: சி.பாலசுந்தரம்,
(கிராம உத்தியோகத்தர் -பளை).

*இலங்கை வங்கி வீதி,*
*சுன்னாகம்.*
(27553) (19-16-17-32)

## ஏகாம்பரநாதன் ரவிச்சந்திரகுமார் (ரவி)

மிருசுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட ஏகாம்பரநாதன் ரவிச்சந்திரகுமார் (ரவி) 16.01.2004 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் ஏகாம்பரநாதன் - இராஜேஸ்வரி தம்பதியினரின் மூத்த மகனும காலஞ்சென்றவர்களான இரத்தினம் - லக்சுமிப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும் வேலுப்பிள்ளை சரஸ்வதிப்பிள்ளையின் பேரனும் தயாழினியின் அன்புக் கணவரும் றாகவியின் பாசமிகு தந்தையும் பாலச்சந்திரகுமார் (வீமன்-போராளி), குகச்சந்திரகுமார் (குகன் - கனடா), சிவச்சந்திரன் (சிவன்-மிருசுவில்), ராஷ்குமார் (கனடா), றாசினி, றாதிகா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு அண்ணனும் இராசகோபால் (கற்சிலைமடு), துரைராசா (சுவிஸ்), இராசநாயகம் (கனடா), கிளி (ஜேர்மனி), தட்சணாமூர்த்தி (கனடா), சதாசிவமூர்த்தி (சாவகச்சேரி), சிவலோகநாயகி (சுவிஸ்), ரதி (கற்சிலைமடு), ராணி (கனடா), ராணி (ஜேர்மனி) ஆகியோரின் மருமகனும் நர்மதா (பளை), பவானி (சுவிஸ்), கண்ணன் (சுவிஸ்), அருள் (சுவிஸ்), மோகன் (கனடா), பாலன் (கனடா), சிவா (கனடா), ராசன் (பவானி ஸ்ரோர்), உதயன் (பவானி ஸ்ரோர்), சீலன் (கஜமுகா ஸ்ரோர்), தவம் (நீர்வேலி), குளோசி (சுவிஸ்), செல்வி (சுவிஸ்), ஜீவா (கனடா), துவாரகன் மிதினா (கனடா), துரேஷ், (கனடா), துஷ்யந்தன் (மிருசுவில்), காலஞ்சென்ற துவாரகன், லக்கியா, சர்மியா, சத்தியா (கற்சிலைமடு), நவநீதன் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆத்மிகா, அபிசாந், விதுசாந், கரிசாந் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் நாகேஸ்வரியின் பெறாமகனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (25.01.2004) ஞாயிற்றுக்கிழமை பகல் 1 மணிக்கு அவரது பிறந்தகத்தில் நடைபெற்று, பூதவுடல் மிருசுவில் வடக்கு மயானத்தில் நல்லடக்கஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வி.ஏகாம்பரநாதன்
(தந்தை).

*மிருசுவில் வடக்கு,*
*மிருசுவில்.* (C/32598)(34-16-17-32)

யாழ்ப்பாணம்

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வரையுள்ளது

## கணக்காளர் பதவிக்கான வெற்றிடம்

01. சம்பள அளவுத் திட்டம் -
104/08 - 5250 - 7750
120 X10 - 130 X10
02. வயது - 30 தொடக்கம் 45 வரை
(சங்கப் பணியாளர்களுக்கு வயது எல்லை பொருந்தாது)
03. விண்ணப்ப முடிவு திகதி - 2004.02.07
04. பிணைப்பணம் - ரொக்கம் ரூ.15000/-
ஆதனப் பிணை ரூ.25000/-
இதற்கு மேலதிகமாகப் பிணை செலுத்த வேண்டிய அவசியம் ஏற்படின் சங்கத்தால் கேட்கப்படுமிடத்து அதை நிறைவேற்றுவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.
05. 1. சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. சங்கத்தில் ரூபா 10/- செலுத்திப் பெற்றுக்கொண்ட விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.
3. மேலதிக விவரங்களைச் சங்கப் பணிமனையில் அறிந்துகொள்ளலாம்.
06. விண்ணப்பங்கள் - பொது முகாமையாளர்,
யாழ்ப்பாணம் பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம் - வ.து,
127, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு "கணக்காளர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் எழுதப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
07. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:
அ. கூட்டுறவுச் சங்க ஊழியர் 9 ஆம் சம்பளத் திட்டத்தில் கணக்காளர்/ உள்ளகக் கணக்குப் பரிசோதகர் பதவியொன்றில் மூன்று (3) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 10ஆம் சம்பளத்திட்டத்தில் கணக்காளர் / உள்ளகக் கணக்குப் பரசோதகர் பதவியொன்றில் ஆறு (6) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.
ஆ. பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவனத்தின் தகுதிச் சான்றிதழ் பரீட்சை அல்லது ஆகுசெலவு முகாமை கணக்காளர் நிறுவன தேர்ச்சி சித்தி கட்டம் 1 அல்லது இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி கணக்கியல் டிப்ளோமா அல்லது சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்காளர் / உள்ளகக் கணக்குப் பரிசோதகர் பதவியொன்றில் இரண்டு (2) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

(சி-32597) (24-13-16)

பொது முகாமையாளர்.
2004.01.20 யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் – வ.து.

# குடாநாட்டில் 32 பேருக்குத் தொழுநோய் அறிகுறிகள்

யாழ்ப்பாணம்,ஜன.24

யாழ். மாவட்டத்தில் 32 பேர் தொழுநோய்க்கான அறிகுறிகளுடன் உள்ளனர் என்று சுகாதாரத் திணைக்களத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட சுழிபுரம், வட்டுக்கோட்டை பகுதியில் 16 பேர் தொழுநோய்க்கான அறிகுறிகளுடன் உள்ளனர் என்றும் - சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் ஒப்பீட்டளவில் இதுவே அதிக எண்ணிக்கை என்றும் - கூறப்படுகிறது.

குடாநாட்டில் தொழுநோயின் தாகத்தைக் குறைக்கும் வகையில் தொழுநோய்த் தடுப்புப் பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதில் முதற்கட்டமாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தொழுநோய குறித்த விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-185)


புதுக்கடை திறப்புவிழா

இன்று 24.01.2004 சனிக்கிழமை
12.00 - 12.15 மணியளவில்
கன்னாதிட்டி வீதியில்
எமது ஸ்தாபனமான



ANUSH & NAREN DIESEL ENGINEERS
அனுஷ் அன் நரேன் டீசல் எஞ்சினியேர்ஸ்

எனும் ஸ்தாபனம் ஆரம்பித்து வைக்கப்படுகின்றது என்பதை
அன்பர்கள், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும்
மிக மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

* Fuel injector, Pump & Parts Service
சகல விதமான இன்ஜெக்டர் பம்களும் மற்றும் இன்ஜெக்டர்களும்
சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும்.

161, கன்னாதிட்டி றோட்,
யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயில் அருகில்). (27504)(32-24-13-17)

க.கபிலேந்திரன் (ராஜா)
T.P - 021 4590098


## நீங்காத நான்காம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
29 - 07 - 1953



உதிர்வு
24 - 01 - 2000

அமரர்

### கந்தையா குணசேகரம்

ஆண்டுகள் நான்கு ஆனபோதும்
ஆறாத் துயரில் தவித்துக் கொண்டிருக்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நாவலடி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

தாய், மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(27542)(12-24-13-16)


COMPUTER EXPRESS
Institute of Information Technology

இலங்கையில் தமிழ்மொழிமூலம் வெளிவரும் கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் கணனிச் சஞ்சிகையின் இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி முதலாவது கிளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

Diploma In Computerized Accounting

இலங்கையில் முதற்தடவையாக Company கணக்குகளுடன்
Computerized Accounting...!

AccPac + Quick Books Pro+ MYOB

ஆகிய சர்வதேச முன்னணி Accounting Software
அனைத்தினூடாகவும் கற்பிக்கப்படும்.

Course Module
- Fundamentals of IT
- Manual Accounting
- Financial Accounting
- Cost Accounting
- Taxation (Including VAT)
- Stock Control
- Bank Reconciliation
- Budgeting
- Fore Casting
- Business Planning

இக்கற்கைநெறியின் முடிவில்....
வேலை கொள்வதற்கு,
Audit Firm Experience தேவையில்லை
Working Experience தேவையில்லை
Basic Qualifications : 3 Passes / Pending A/L Results
Theory & Practical : 3Months
Project : 1Month
Commencing on 31st January 2004

FACILITIES
- Unlimited Practical Hours
- Library Facilities
- Instalment Basis Payment
- Lowest Course Fee
- Free Educational Advice

அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள். இன்றே உங்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

இல.152/1, சிராம்பையடி வீதி,
யாழ்ப்பாணம்.
(Off Stanley Rd)
0777 - 278883

COMPUTER EXPRESS
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY.
(C-32593)(32-24-13-17)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் வேலுப்பிள்ளை தம்பிராசா

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)

எமது பாடசாலையின் ஆசிரியர் திரு. பொ. திருப்பதி அவர்களின் மாமனார் வே. தம்பிராசா கடந்த 25.12.2003 அன்று சிவபதமடைந்தமையால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, 31 ஆம் நாளாகிய இன்று அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கெற்பேலி, மிருசுவில்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.
யா/கெற்பேலி அ.த.க. பாடசாலை.

(சி-32596) (19-24-13-17)

உதயன்

# கல்வித்துறையில் அநீதி!

"வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மொத்தம் 7 ஆயிரத்து 272 ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றன.

"அவற்றில் 3 ஆயிரத்து 193 ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2000 ஆம் ஆண்டில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. ஆனால், இதுவரை ஆக ஆயிரத்து 656 பேருக்கு மட்டுமே நியமனங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன."

- இந்த மோசமான நிலையை ஒப்புக் கொண்டிருப்பவர் வேறு யாருமல்லர், இந்த நாட்டின் கல்வி, மனித வள, பண்பாட்டலுவல்கள் அமைச்சர் கருணாசேன கொடித்துவக்குத்தான். இந்த 'உண்மைகளை' பகிரங்கமாக ஏற்றுக்கொண்டிருக்கின்றார். அதுவும் நாட்டின் உயர் சட்டமாக்கல் அவையான நாடாளுமன்றத்தில் இதனைப் பகிரங்கமாக அவர் ஒப்புக்கொண்டிருப்பது கவனிக்கத்தக்கது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் - தமிழர் தாயகத்தில் - கல்வித்துறை எவ்வாறு சீரழிந்துள்ளது, இப்பிரதேச மக்களின் கல்வித்துறையை இலங்கை அரசு எவ்வளவு தூரம் மாற்றாந்தாய் மனப்பான்மையோடு பேணுகின்றது என்பதையெல்லாம் அம்பலப்படுத்தும் விதத்தில் தமிழீழக் கல்விக்கழகத்தின் செயலாளர் நாயகம் வெ.இளங்குமரன் பகிரங்க அறிக்கை ஒன்றின் மூலம் வெட்ட வெளிச்சமாக்கியிருக்கின்றார்.

வடக்கு - கிழக்கு கல்வித்துறை எவ்வாறு திட்டமிட்டு ஒதுக்கப்படுகின்றது என்பதைப் புள்ளி விவரங்களோடு அவர் அந்த அறிக்கையில் தெளிவுபடுத்தியிருக்கின்றார். அந்த விடயங்களைக் கவனத்தில் எடுத்துள்ள - கல்வித்துறையோடு தொடர்புடைய - பல சர்வதேச தொண்டர் அமைப்புகள் அதிர்ந்துபோய் இருப்பதாகத் தகவல்.

உதாரணத்துக்கு அதில் இடம்பெற்றுள்ள சில புள்ளி விவரங்களை நோக்குவது நல்லது.

✳ வடக்கு - கிழக்கில் - பெரும்பாலும் தமிழ்ப் பாடசாலைகளில் - ஐயாயிரத்துக்கு அதிகமான ஆசிரிய வெற்றிடங்கள் இருக்க, வெளி மாகாணங்களில் சுமார் 14 ஆயிரம் சிங்கள ஆசிரியர் அளவுக்கு அதிகமாக - மேலதிகமாக - இருக்கின்றார்கள்.

✳ பட்டதாரிகள் - ஆயிரம் பேர், ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் - ஆயிரம் பேர், தொண்டர் ஆசிரியர்கள் - ஆயிரம் பேர் என மூவாயிரம் ஆசிரிய நியமனங்களை வடக்கு - கிழக்கில் வழங்குவதற்கு உலக வங்கி அங்கீகாரமளித்து மூன்று வருடங்களாகிவிட்டன. இரண்டு வருடங்கள் கழித்துத்தான் ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டது; ஆறு மாதங்களுக்கு முன்னர்தான் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் கிடைத்தது. அதுவும் பல்வேறு குளறுபடிகளுடன்தான் அந்த நியமன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது; உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தோரைத் தெரிவுசெய்வதற்கு மூன்று ஆண்டுகள் கழித்து இப்போதுதான் முன்னறிவிப்பு வெளியாகும் நிலை. அந்த அறிவிப்புகளிலும் பல குழப்பங்கள், நேர்சீரின்மை.

✳ கடந்த ஆண்டில் அதிபர் சேவை தரம் உயர்வு வழங்கப்பட்ட விதம் இந்நாட்டில் இனவாதம் எப்படியெல்லாம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதற்கு உறுதியான சான்று. தரம் I இல் - இருநூறு பேர் (198 சிங்களவர், ஒரு தமிழர், ஒரு முஸ்லிம்); தரம் II இல் - ஐந்நூறு பேர் (470 சிங்களவர், 19 தமிழர், 11 முஸ்லிம்கள்); தரம் III இல் ஐந்நூறு பேர் (487 சிங்களவர், மூன்று தமிழர், பத்து முஸ்லிம்கள்) இச்சேவைக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர்.

✳ ஸ்ரீலங்கா கல்வி நிர்வாக சேவை நியமனத்திலும் தர உயர்விலும் காட்டப்படும் இனப் பாரபட்சமோ மோசத்திலும் மோசம்.

தேசிய மட்டத்தில் இச்சேவையில் பணியாற்ற வேண்டியோரின் எண்ணிக்கை ஆக 2 ஆயிரத்து 400 மட்டுமே. ஆனால், 11ஆயிரத்து 400 பேர் (அதாவது சுமார் நானூறு வீதம் அதிகம்) பணியில் உள்ளனர்.

ஆனால், வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள 24 கல்வி வலயங்களிலும் பணியாற்றக் குறைந்தது 370 கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் தேவை. ஆனால், இருப்பவர்களின் எண்ணிக்கையோ ஆக 124 தான். இன்னும் 236 பேருக்குப் பற்றாக்குறை.

அதாவது, தெற்கில் தேவைக்கு நான்கு மடங்கு அதிகமாக அதிகாரிகள் பணியில். வடக்கு - கிழக்கிலோ தேவையின் மூன்றில் ஒரு பகுதி எண்ணிக்கைக்கும் அதிகாரிகள் இல்லை.

இச்சேவைக்கு ஆள்களைச் சேர்க்க பரீட்சைகள் நடத்தி நீண்டகாலமாகிவிட்டது. ஆனால், முடிவுகள் மட்டும் வெளியாகவில்லை.

- இவ்வாறு வடக்கு - கிழக்கின் கல்வித்துறை தொடர்பாக ஒவ்வொரு விடயத்திலும் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் அநீதிகளை விலாவாரியாக புள்ளி விவரங்களோடு புட்டுப்புட்டுக் காட்டுகின்றது அந்த அறிக்கை.

அது இலங்கை கல்வி அமைச்சர் உட்பட சகல பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளினதும் கவனத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகின்றது

இந்த அநீதிகளுக்கு கல்வி அமைச்சரும், அவரது அரசும், அதிகாரிகளும் கூறும் பதில் - சமாதானம் - என்ன? ஆசிரிய நியமன விடயத்தில் உண்மையைப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டமை போன்று ஏனையவற்றையும் ஒப்புக்கொள்ள அவர்கள் தயாரா?

# ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கு வயதெல்லை 35ஆக நீடிப்பு!

## மேலும் பாடங்களும் இணைப்பு

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள பாடசாலைகளுக்கு ஆயிரம் ஆசிரியர்களை நியமிப்பதற்குரிய போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்போருக்கான வயதெல்லை 35ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் மனிதவள அபிவிருத்தி, கலாசார அலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் ஆசிரியர்களை சேர்த்துக கொள்வது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் கடந்த நவம்பா மாதம் 28ஆம் திகதி வெளியிடப்பட்டது.

அதன் பிரகாரம் இதற்கு விண்ணப்பிப்போருக்கான வயதெல்லை 18 வயதிற்குக் குறையாமலும் 30வயதிற்கு மேற்படாமலும் இருக்கவேண்டும் - என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

அத்துடன், விஞ்ஞானம்,கணிதம், ஆரம்பக்கல்வி மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கே ஆசிரியர்கள் நியமிக்கப்பட இருப்ப தாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது இந்த அறிவித்தலில் மனிதவள அபிவிருத்தி, கலாசார அலுவல்கள் அமைச்சு மாற்றங்களைச் செய்துள்ளது. இதன்படி விண்ணப்பிப்போருக்கான வயதெல்லை 18வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.

முன்னர் குறிப்பிட்ட பாடவகைகளுடன் மேலதிகமாக உடற்கல்வி, நடனம், விவசாயம், சங்கீதம், மனைப்பொருளியல் மற்றும் சித்திரம் ஆகிய பாடத்துறைகளும் போட்டிப் பரீட்சையில் சேர்க்கப்பட்டுள்ளன.

இதற்கான போட்டிப்பரீட்சை வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள 8 மாவட்டங்களிலும் நடைபெறவுள்ளது.

இதற்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித்திகதி எதிர்வரும் 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விவரங்களை உதயன் பணிமனைக்கு அருகில் உள்ள அருணஸ் பிறின்டேர்ஸ் நிறுவனத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

(ஓ-5)

# வன்னி, அக்கராயன்குளம் ஆஸ்பத்திரியில் நோயாளர் அதிகம்; டாக்டர்கள் பற்றாக்குறை!

சண்டிலிப்பாய்,ஜன.24

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அக்கராயன்குளம் அரசினர் வைத்தியசாலையில் வைத்திய அதிகாரிகளுக்குப் பற்றாக்குறை காணப்படுகின்றது. ஓய்வுபெற்ற பின்பு மீள் நியமனம் பெற்ற டாக்டர் எஸ்.திருச்சிற்றம்பலம் இவ்வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றி வருகின்றார். இங்கு நிர்வாகக் கடமைகளை இவர் மேற்கொண்டு வருவதுடன வெளிநோயாளர்களுக்கு சிகிச்சையளித்தல், வார்ட்டுக்களிலுள்ள ஆண் - பெண் நோயாளர்களுக்கு சிகிச்சையளித்தல் ஆகிய பணிகளையும் மேற்கொண்டு வருகிறார்.

இதேவேளை - இவ்வைத்தியசாலையில் சிகிச்சைபெற வரும் நோயாளர்கள் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. வன்னேரிக்குளம் அரசினர் வைத்தியசாலை நிரந்தர டாக்டர் இல்லாததினால் பகுதிநேர வைத்தியசாலையாகச் செயற்பட்டு வருகிறது. அப்பகுதியைச் சேர்ந்த மக்களும் சிகிச்சைக்காக அக்கராயன்குளம் அரசினர் வைத்தியசாலையையே நாடி வருகின்றனர். ஸ்கந்தபுரம், கோணாவில், அமைதிபுரம், நஞ்சுண்டகாடு, ஆரோக்கியபுரம், கண்ணபுரம், முக்கொம்பன் ஆகிய பல்வேறு கிராமங்களையும் சேர்ந்த மக்களும் வைத்திய சிகிச்சை பெறுவதற்காக இவ்வைத்தியசாலைக்கே வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்ட பிரதி சுகாதாரசேவைப் பணிப்பாளர் டாக்டர் என்.சத்தியமூர்த்தி இவ்வைத்தியசாலையில் இருவாரங்களுக்கு ஒருமுறை நடைபெறும் வைத்திய கிளினிக்குக்கு வந்து கிளினிக் நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கி வருகின்றார் என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இங்கு அம்புலன்ஸ் வண்டி ஒன்றும் உள்ளது. அவசர நோயாளர்கள் இவ்வண்டி மூலம் கிளிநொச்சியிலுள்ள அரசினர் மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர்.

(ஐ-135)

# பாடசாலைகளில் விரைவில் பாடசாலை அபிவிருத்திச்சபை

வலிகாமம்தெற்கு,ஜன.24

பாடசாலைகளில் 'பாடசாலை அபிவிருத்திச் சபை' ஒன்றை ஏற்படுத்திக் கற்றல், கற்பித்தல் நடவடிக்கையை முன்னெடுக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஏற்கனவே இயங்கிவரும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் என்பவற்றுக்குப் புறம்பாக பாடசாலை அபிவிருத்திச் சபைகள் செயற்படும் எனத் தெரியவருகின்றது.

காலஞ்சென்ற ஜனாதிபதி ஆர்.பிரேமதாசாவினால் இயற்றப்பட்ட திட்டத்தைத் தழுவியதாக இத்திட்டம் அமைய உள்ளது.

சில பாடசாலைகளின் முன்னேற்றத்துக்கும், கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளுக்கும் தற்போது நடைமுறையில் இருந்து வரும் பாடசாலை பழையமாணவர் சங்கம் போன்ற நிறுவனங்களால் சிலசிரமங்கள் ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்தே, பாடசாலை அபிவிருத்திச் சபை ஒன்றை நிறுவி அதன் மூலம் அப்பணிகளை முன்னெடுக்க முடியும் எனக் கல்வி அமைச்சு தீர்மானித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சபைகளை நிறுவுவதற்கான முற்பணத்தை அரசு வழங்கும் எனவும் பாடசாலைகள் இதற்காக 20லட்சம் ரூபா வரையில் நிதியைத் திரட்டிச் செயற்பட அனுமதிக்கப்படும் எனவும் -

அண்மையில் கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர்களுடனான கலந்துரையாடலின்போது கல்வி அமைச்சர் சுரநிமல ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார்.

(ஐ-152)

# கீரிமலை குடிதண்ணீர்த் தாங்கியை இயக்குவதற்கு ஊழியர் செல்ல அனுமதி

யாழ்ப்பாணம்,ஜன.24

கீரிமலைப் பகுதியில் பொதுமக்களின் நலன்கருதி நிறுவப்பட்டிருக்கும் குடிதண்ணீர்த் தாங்கியை இயக்குவதற்காக பணியாளர்கள் அப்பகுதிக்குச் சென்றுவர படைத்தரப்பு அனுமதி வழங்கியுள்ளது.

யாழ். மாவட்ட படைத்தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால இதற்கான அனுமதியை வழங்கியிருக்கிறார்.

வலி.வடக்குப் பகுதியைச் சேர்ந்த பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள், கிராம அலுவலர்கள் ஆகியோருடன் கடந்த புதனன்று நடத்திய கலந்துரையாடலின் போதே இந்த அனுமதியைப் படைத்தளபதி வழங்கினார்.

இது தொடர்பாக படைத்தலைமையகம் விடுத்திருக்கின்ற செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து (பாதுகாப்பு வேலிக்கு அப்பால்) 600 மீற்றர் தூரத்திலுள்ள வீடுகள், காணிகளின் உரிமையாளர்கள் மீளக்குடியமர முடியும் என்பதுடன், பாதுகாப்பு வலயத்தின உள்ளே அமைந்துள்ள கூட்டுறவுச் சங்கம், பிரதேச சபைக காரியாலயம் மற்றும் கோவில் புனரமைப்புக்கும், தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையில் சிற்றுண்டிச்சாலையை ஆரம்பிப்பதற்கும் பாதுகாப்பு அனுமதி பெற்றுக்கொண்டு அப்பணிகளை ஆரம்பிக்க முடியும். அதேவேளை- கீரிமலையில் அமைந்துள்ள குடிதண்ணீர்த் தாங்கியை செயற்படுத்துவதற்கு பணியாளர்களை ஈடுபடுத்த வேண்டுமானால் அதற்கும் பாதுகாப்பு அனுமதி பெற்றுக கொண்டு பணியாளர்களை சேவையில் ஈடுபடுத்த முடியும்.

-இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# தேர்தலுக்கு முன்பாக வன்முறை வெடிக்கலாம்

## கண்காணிப்பு அமைப்பு எச்சரிக்கை

கொழும்பு,ஜன.24

தேர்தலுக்கு முன்னதாகவே வன்முறைகள், மோசடிகள் என்பன இடம்பெறக்கூடிய அறிகுறிகள் தென்படுவதாகத் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கின்ற அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மாகாணசபைத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து பொதுத்தேர்தலும் இடம்பெறுவதற்கான சாத்தியங்கள் தென்படுகின்றன. இதனால், இம்முறை வன்முறைகள் அதிகரிக்கின்ற வாய்ப்பு அதிகரித்துள்ளது என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி, பிரதமர் உட்பட்ட அரசியல் உயர்தலைவர்கள், பொலீஸார் தமது தேர்தல் காலக்கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றுவதை உறுதி செய்யவேண்டும் என்றும் அந்த அமைப்புக் கோரியுள்ளது. (ம-4)

## நாளை

தை 11
ஞாயிற்றுக்கிழமை
(25.01.2004)
திதி : சதுர்த்தி
இரவு 11.40 வரை
நட்சத்திரம்: சதயம்
காலை 6.51 வரை
சதுர்த்தி விரதம்
சுபநேரம்: 9.36-11.06
ராகுகாலம்: 5.06-6.36
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

வீழ்வது வெட்கக் கேடு அல்ல. வீழ்ந்துகிடப்பதே வெட்கக்கேடானது.

# சேலை வியாபாரி போல் வந்தவர் சிறுமியின் நகையை அபகரித்தார்!

## பொதுமக்கள் விரட்டிப் பிடித்தனர்

கொடிகாமம்,ஜன.24

சேலை வியாபாரி வேடத்தில் சென்று குழந்தையின் தங்கச் சங்கிலியை அபகரித்த நபர் பொதுமக்களிடம் சிக்கினார். இந்தச் சம்பவம் கடந்தவாரம் மிருசுவில் பகுதியில் இடம்பெற்றது.

இந்தியாவிலிருந்து வந்த சேலை வியாபாரி என்று தன்னைக் கூறிக்கொண்ட நபர் ஒருவர் மிருசுவில் பகுதியில் உள்ள வீடொன்றிற்குச் சென்றுள்ளார். தான் வைத்திருந்த புடைவைகளை வீட்டிலிருந்த பெண்மணிக்குக் காட்டினார். பின்னர் குடிப்பதற்குத் தண்ணீர் கேட்டார்.

அந்தப் பெண்மணியும் தண்ணீர் எடுப்பதற்காக வீட்டிற்குள் சென்றார். அப்போது அங்கு நின்றிருந்த குழந்தையின் தங்கச் சங்கிலியை அபகரித்துக்கொண்டு மேற்படி நபர் தப்பியோடினார்.

அதற்குள் தண்ணீருடன் வந்துவிட்ட பெண்மணி இதனைக் கண்டு குரல் எழுப்பினார். இதனையடுத்து, அங்கு கூடிய அயலவர்கள் மேற்படி நபரை விரட்டிப் பிடித்தனர். அவரிடம் இந்தியக் கடவுச்சீட்டு இருந்ததாகவும், அவர் உரிய இடத்தில் ஒப்படைக்கப்பட்டார் என்றும் கூறப்படுகிறது.

(ஒ-74)

# வன்னியில் பல வீதிகள் படுமோசம்: ஏ-9 வீதியில் பாலங்கள் புனரமைப்பு

சண்டிலிப்பாய்,ஜன.24

அக்கராயன்குளம் சந்தியிலிருந்து ஸ்கந்தபுரம் செல்லும் வீதி பலத்த சேதமடைந்து காணப்படுகிறது. இவ் வீதி வழியாக மல்லாவியிலிருந்து முகமாலை செல்லும் பஸ் வண்டிகளும், கிளிநொச்சியிலிருந்து வரும் பஸ் வண்டிகளும் ஸ்கந்தபுரம் சந்தி வரை சென்று வருவதால் மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே பிரயாணத்தை மேற்கொண்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. வாகனங்கள் யாவும் வீதி சீர்கேட்டினால் ஊர்ந்து ஊர்ந்து மெதுவாகவே பயணிக்கின்றன. இதுவரை தார் போடப்படாமல் வெறும் கிரவல் மண் போட்ட வீதியாக இவ்வீதி இருந்து வருகின்றது. இதனால் விபத்துகளும் அடிக்கடி இங்கு ஏற்படுவதாக இப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை -

ஸ்கந்தபுரத்திலுள்ள சில குறுக்கு உள்வீதிகள் ஸ்கந்தபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம் மேற்கொண்ட முயற்சியினால் பொதுமக்களின் பங்களிப்புடன் சிரமதானம் மூலம் கிரவல் மண் போடப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. ஆனால், இவ்வீதிகளில் போடப்பட்டிருக்கும் சிறிய மதகுகள் சேதமடைந்த நிலையில் புனரமைப்புச் செய்யப்படாது [illegible]மாக இருந்து வருகின்றன.

ஸ்கந்தபுரத்திலிருந்து கோணாவில் செல்லும் வீதியிலுள்ள பாலம் ஒன்று புனரமைப்பு செய்யப்பட்டு வருவதால் வாகனங்கள் இவ்வீதி வழியாகச் செல்ல முடியாதுள்ளது. பல கிலோ மீற்றர் தூரம் சென்று அக்கராயன்குளம் - கோணாவில் வீதி வழியாகவே வாகனங்கள் தற்போது சென்று வருகின்றன.

முறிப்பு குளத்திற்குப் பக்கத்தில் கிளிநொச்சி - கோணாவில் வீதியில் புதிய பாலம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

கடந்த காலத்தில் இவ்வீதியில் மழை வெள்ளம் பாயும் இடமாகப் போக்குவரத்திற்கு மிகவும் கஷ்டமாக இருந்த இடத்திலேயே புதிய பாலம் நிர்மாணிக்கப்படுகிறது.

இதேவேளை -

நீண்டகாலமாகப் பலத்த சேதமடைந்தநிலையில் இருந்து வந்த பிரதான வீதிகளில் ஒன்றான முறிகண்டி - அக்கராயன்குளம் பிரதான வதி கிரவல் மண் போடப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. முறிகண்டிப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து மேற்குப் பக்கமாகச் செல்லும் இவ்வீதி அக்கராயன்குளம், வன்னேரிக்குளம் ஆகிய இடங்களுக்குச் செல்லுகின்றது.

கிளிநொச்சி - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் (ஏ-9 வீதி) புனரமைப்புப் பணிகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன. இவ்வீதியில் கருங்கற்கள் பதிக்கப்பட்டு வீதியும் அகலமாக்கப்பட்டு புனரமைப்புச் செயயப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. இப்பிரதான வீதியில் கரடிப்போக்கு சந்திக்கருகில் பாலம் ஒன்றும், பரந்தனுக்கு சமீபமாகவுள்ள உமையாள்புரப் பகுதியில் மற்றொரு பாலமும் ஆனையிறவு - இயக்கச்சி வீதிப் பகுதியில் இன்னொன்றுமாக மூன்று பாலங்கள் தற்போது புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றன. இப்பாலங்கள் உள்ள இடங்களுக்கு பக்கத்தில் தற்காலிக பாதைகள் நிறுவப்பட்டு அவற்றின் ஊடாக வாகனங்கள் சென்று வருகின்றன. இன்னும் ஒரு மாத காலத்திற்குள் இந்த வேலைகள் பூர்த்தியடைந்து விடும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-135)

## ஆசிரியர் தெரிவு போட்டிப் பரீட்சை வகுப்புகள்

தமிழ் மொழிமூல ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சைக்கான இலவச தயார்ப்படுத்தல் வகுப்புகள் இன்றும் நாளையும் வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரியில் நடத்தப்படவுள்ளன. விரும்பியவர்கள் பாடசாலை நேரத்தில் அலுவலகத்தில் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளலாம் என்று சிதம்பரக் கல்லூரி அதிபர் எம்.அரியரத்தினம் கேட்டுள்ளார்.

## கைதடியில் 'வேரடி மண்'

கைதடி,ஜன.24

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினால் நடத்தப்பட்டுவரும் 'வேரடி மண்' என்ற பெண்களுக்கான விளையாட்டு மற்றும் கலைநிகழ்வுகள் கைதடி மேற்கில் இன்று சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை சரஸ்வதி சனசமூக நிலைய மாதர் மன்றத் தலைவர் திருமதி கந்தசாமி ரஞ்சிதமலர் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஒ-75)

## ஆலயத்தில் திருட்டு!

அத்தியடிப் பிள்ளையார் ஆலய உண்டியல் நேற்று முன்தினம் உடைக்கப்பட்டு அதிலிருந்த பணம் அபகரிக்கப்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் அத்தியடி நாவலர் வீதிச் சந்தியிலுள்ள தனியார் கடையொன்றிலும் இரவு வேளை பல பொருள்கள் களவாடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.(ஒ-30)

## ஏழாலையில் கண்சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம்,ஜன.24

மல்லாகம், தெல்லிப்பழை, திருநெல்வேலி, இணுவில், மானிப்பாய், யாழ்ப்பாணம் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த லயன்ஸ் கழகங்கள் இணைந்து நடத்தும் 'கற்றாக்' பாதிப்புக்குள்ளானோருக்கான இலவசக் கண் பரிசோதனை முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு ஏழாலை மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கண் மருத்துவ நிபுணர் எஸ்.குகதாசன் இந்தச் சிகிச்சை முகாமில் சேவையாற்றுவார். (ஒ-ரி)

## 'ஞானச்சுடர்' படைப்பாளிகளுக்கு!

யாழ்ப்பாணம்,ஜன.24

'ஞானச்சுடர்' மலருக்கு 2001, 2002, 2003 ஆம் ஆண்டுகளில் ஆக்கங்களை அனுப்பிவைத்தவர்கள் தங்களது பெயர், முகவரி போன்ற விவரங்களை சந்நிதியான் ஆச்சிரமம், சைவ கலை பண்பாட்டுப் பேரவை, தொண்டமனாறு என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகள் கேட்டுள்ளார். (ஒ-8)

## பண்டத்தரிப்பு - மாதகல் வீதி திருத்தம்

சண்டிலிப்பாய்,ஜன.24

பலத்த சேதமடைந்திருந்த பண்டத்தரிப்பு - மாதகல் பிரதான வீதி திருத்தப்பட்டுள்ளது. குண்டும் குழியுமாக இருந்துவந்த இவ்வீதியைப் புனரமைத்துத் தருமாறு இப் பகுதி மக்கள் யாழ். வீதிகள் அபிவிருத்தி அதிகாரசபையிடம் கடித மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தனர். (ஐ-135)

## 31ஆவது தின இதய அஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12 - 07 - 1925 | 25 - 12 - 2003 |



### திருமதி இராசரத்தினம் பாக்கியம்

சித்தம் மகிழ்ந்திடவே அம்பாளை நினைந்து
நித்தம் வணங்கியே திருவடி அடைந்த
எமது குடும்ப விளக்கின் முப்பத்தோராம்
நாளை நினைவு கூர்ந்து
ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

வளாகவீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம். (27521)(35-12-19-24) - குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



துன்னாலை கிழக்கு,
கரவெட்டியைச் சேர்ந்த
திருமதி
**ஆறன் சின்னமணி**

அவர்களின் திடீர் மறைவு எமக்கு மிகுந்த மனவேதனையை அளிக்கின்றது. அவரது பிரிவால் வருந்தும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அமரருக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம். ஆத்மசாந்திக்காக ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

துன்னாலை கிழக்கு,
கரவெட்டி. (27528)(34-24-12-19) - உறவினர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஆறன் சின்னமணி

துன்னாலை கிழக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆறன் சின்னமணி அவர்கள் 22.01.2004 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பன் - சின்னாங்காள் அவர்களின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான பண்டாரவல்லி அவர்களின் அன்புமிகு மருமகளும் காலஞ்சென்ற வல்லி ஆறன் அவர்களின் பாசமிகு மனைவியும் க.இராசமலர், ஆ.இராசமணி, ஆ.துரைராசா, சி.இராஜேஸ்வரி (தேவி), ஆ.சௌந்தரராஜன் (ரவி), சி.இராசபாக்கியம் (சாரதா), ஆ.வீ வீ ராஜன் (செல்வன்) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.01.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக துன்னாலை தெற்கு புட்டுது இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துன்னாலை கிழக்கு,
கரவெட்டி. (27527)(34-24-12-19)

தகவல்:
ஆறன் வீ வீ ராஜன்
(செல்வன் - மகன்).

### திருமதி செல்லமணி மார்க்கண்டு

(முகாமையாளர், ஶ்ரீவராகி அம்பாள் தேவஸ்தானம்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்)

'வெண்மதி' ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லமணி மார்க்கண்டு (கொக்குவில் ஶ்ரீவராகி அம்பாள் தேவஸ்தான முகாமையாளர்) 22.01.2004 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா - மார்க்கண்டுவின் அன்பு மனைவியாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'வெண்மதி', ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை. (27530) (19-12-24)

தகவல்:
குடும்பத்தினர்.


## வேலையாள்கள் தேவை

**Multimedia, Software**
துறைகளில் வேலைசெய்ய ஆள்கள் தேவை.
ஆர்வமுடையவர்கள்
நாளை 25.01.2004
ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு
**"MOUSE"**
கே.கே.எஸ். வீதி, இணுவில்
என்ற முகவரிக்கு நேர்முகப் பரீட்சைக்கு சமுகம் தரவும்.

நிர்வாகி,
Mouse (PVT) Ltd. (27436) (26-21-12-18)


## முப்பத்தோராம் நாள் நினைவுப்பூக்கள்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 20 - 05 - 1911 | 24 - 12 - 2003 |



### திருமதி கதிரவேலு மாணிக்கம்

கண்மணிபோல் எனைக் காத்து
கணநேரமும் பிரியாது
எந்நேரமும் தம்பி தம்பி என
மன நிறைவோடு அழைப்பாயே!
திண்ணையிலே காத்திருந்து
வந்தவர்களுக்குப் பதிலளித்து
துணையாயிருந்த நீ எங்களைத்
தவிக்கவிட்டுத் தனிவழியே சென்றாயோ?

தில்லைகட்டி,
சுன்னாகம்.

திரு.திருமதி கருணைநாயகம்.

(சி-32592) (32-12-16-24)

## கண்ணீர் அஞ்சலி



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும்
கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட எமது அன்புக்குரியவரான
**இராமநாதன் கிருஷ்ணகோபன்**
(கிருஷ்ணா - நாதஸ்வர வித்துவான்)
அவர்கள் கனடாவில் காலமானார்.
நாதமழை ஓய்ந்ததுவோ! நமது காதுகளில்
ஒலித்த இனிமை நிறைந்த அந்தக்
கீத ஒலியை இனி எப்போது கேட்போம்?
ஆத்மா சாந்தி அடைவதாக!

கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (27525) (24-12-16) - இ.திலகவதி (தாய்).

## மரண அறிவித்தல்

### இராமநாதன் கிருஷ்ணகோபன் (கிருஷ்ணா)

(நாதஸ்வர வித்துவான்)

கோண்டாவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கனடாவில் வசித்தவருமான நாதஸ்வரவித்துவான் இராமநாதன் கிருஷ்ணகோபன் (கிருஷ்ணா) அவர்கள் கடந்த (11.01.2004) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2004) சனிக்கிழமை (கனடா நேரப்படி நண்பகல் 12 மணியளவில்) கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குட்டிப்பிள்ளையார் லேன்,
கே.கே.எஸ். றோட்,
கோண்டாவில் மேற்கு
கோண்டாவில். (27526) (24-12-16)

தகவல்:
திலகவதி
(தாய்).

# சூழல் பாதிப்பில் சிக்கித் தவிக்கும் ஆசிய நகரங்கள்

**ஆசியக் கண்டத்திலுள்ள நாடுகள் மிக வேகமாக அபிவிருத்தியடைந்து வருகின்றபோதிலும், சூழல் மாசுபடுவதால் பல ஆபத்துக்களை எதிர்நோக்கு கின்றன. இது குறித்து 'ரொயிட்டர்' செய்தி நிறுவனம் வழங்கிய தகவல் களை இங்கு தொகுத்துத் தருகின்றோம்.**

ஆசியா மிக வேகமாக அபிவிருத்தியடைந்து வரும் வலயமாகும். ஒரு காலத்தில் உலகில் மிக மோசமான பொருளாதாரப் பின்னடைவுகளை எதிர்கொண்ட இப்பெரும் கண்டம், இன்றைய நிலையில் வேகமான பொருளாதார வளர்ச்சியை அடைந்துள்ளது.

ஒரு புறத்தில் இப்பொருளாதார முன்னேற்றங்களை அடைந்துவரும் வேளையில் மறுபுறத்தில் ஆசியா சூழல் பாதிப்புக்கள் என்ற ஆபத்தை எதிர்கொள்கிறது.

ஒருசில நாடுகள் இதையுணர்ந்து செயலாற்றிவரும் வேளையில், பெரும்பாலான நாடுகள் இதுபற்றி அறியாது இந்த ஆபத்தில் சிக்கிக்கொண்டுள்ளன. இது சூழல் மாசடைதல் என்னும் ஆபத்தாகும். இதனின்றும் மீண்டு வருவது யார்? இன்று அதனுள் விழ உள்ளோர் யார்? ஆகியனவற்றை வெகுவிரைவில் எம்மால் காணக்கூடியதாக இருக்கும்.

ஆசியாவின் சூழல் மாசடைவது தொடர்பான இதுவரை சரியான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படாத போதிலும் ஒவ்வோர் ஆண்டிலும் சூழல் மாசடைவதால் இழக்கப்படுபவை எண்ணிலடங்காதவையாகும். ஒவ்வோர் ஆண்டிலும் இந்தோனேஷியாவில் 4மில்லியன் ஹெக்டேயர் பரப்பிலான காடுகள் காட்டுத் தீயினால் அழிந்து போகின்றன. அழிவுக்குட்படும் இக்காடுகளின் பரப்பு சாதாரணமாக சுவிட்ஸர்லாந்தின் நிலப்பரப்பளவுக்குச் சமமானதாகும். சீனாவின வடபகுதியிலுள்ள பெரும்பாலான பகுதிகள் மணற்புயல் காரணமாக அழிந்துபோகின்றன. ஹொங்கொங்கில் அமைந்துள்ள "பேர்புளூ" துறைமுகம் சில காலங்களாக கழிவுப்பொருள்கள் வந்தடைவதால் மாசடைந்து வருகிறது.

அதுமாத்திரமல்ல பழமைவாய்ந்த மொங்கோலியா முதல் தெற்காசியா வரையுள்ள பெரும்பாலான நிலப்பிரதேசங்கள் சூழல் மாசடைந்தமை காரணமா அழிந்துபோயுள்ளன. இவற்றைத் தடுப்பதற்கான சாத்தியங்களை பெரும்பாலான நாடுகள் கொண்டுள்ளபோதும், அவை செயற்படுத்தப்படுமா என்பது சந்தேகத்துக்குரியதே.

ஐககிய நாடுகள் அமைப்பின் விசேட பிரதிநிதியான ரவிசொவ்னி இத்தகைய சூழல் மாசடைதல்கள் பெருமளவில் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கிறார்.

இத்தகைய மாசடைதல்கள் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றனவேயன்றிக் குறைவதாகத் தெரியவில்லை. இதுதொடர்பான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது அவசியமாகும். அவ்வாறு செயற்படத் தவறுமிடத்து, மிகப் பாரதூரமான விளைவுகள் உருவாகக்கூடும் என்பதே ரவிசொவ்னியின் கருத்தாகும். இதுவரை அவர் கூறிய கூற்றுக்கள் கூறியவாறே நடைபெற்றுள்ளன.

பிலிப்பைன்ஸிலும் இந்தோனேஷியாவிலும் ஏற்பட்டுள்ள மண்சரிவுகள் இவற்றுள் ஒன்றாகும். இம்மண்சரிவுகளுக்கு முக்கிய காரணமாகயிருப்பது காடழிப்பேயாகும்.

**மாசடைவதைத் தடுத்தல்**

உலகில் அதிகமாக மாசடைந்துள்ள 15 நகரங்களுள் 6 நகரங்களும் ஆசியாவிலேயே உள்ளன. காபன்டை ஒக்ஸைட் வாயு மண்டலத்தில் பரவவிடும் செயற்பாட்டில் மூன்றாமிடம் வகிப்பது ஆசியாவாகும். ஆசியாவில் 785 மில்லியன் மக்களுக்கு குடிப்பதற்கு உகந்த நீர் இல்லாதுள்ளது. இதன்காரணமாகவே அநேக ஆசிய நகரங்கள் ஆபத்தை எதிர்நோக்குகின்றன.

எவ்வாறாயினும், தற்போது சில ஆசிய நகரங்களில் சிறு முன்னேற்றம் காணபடுகிறது. ஆசியாவில் மோசமான சூழல் மாசடைதலுக்கு ஆளான பாங்கொக், டாக்கா, புதுடில்லி மற்றும் சீனாவின் பெரும்பாலான நகரங்கள் இன்று சூழல் மாசடைவதிலிருந்து மீண்டுவருகின்றன. கனிம எரிபொருள்கள் மூலம் வெளியேற்றப்படும் அசுத்த வாயுக்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக ஏற்கனவே இந்நகரங்களின் நிர்வாகம் தொடர்பான அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.





பங்களாதேஷ் கடந்த இரண்டு ஆண்டுகளாக பெற்றோலுக்குப் பதிலாக இயற்கை எரிபொருள்களை வாகனங்களுக்குப் பாவிப்பது தொடர்பாக 30 மில்லியன் டொலர்களை முற்றாகச் செலவழித்துள்ளது. அவர்கள், அதிகளவில் காபனை வெளியேற்றும் இரட்டை சுழற்சி அசைவு இயந்திரங்கள் (ரு ஸ்ரோக் - TWO STROKE ENGIENE) இயந்திரங்கள் மூலம் இயங்கும ரிக்ஷா வண்டிகளுக்குப் பதிலாக, இயற்கை வாயுக்கள் மூலம் இயங்கும் ரிக்ஷாக்களை அறிமுகப்படுத்தியுள்ளனர் இக்காரணத்தினாலேயே பங்களாதேஷின் டாக்கா நகர் உள்ளிட்ட வேறு சில நகரங்களிலும் சூழ்ந்துள்ள வாயுமண்டலம் முன்னரைவிடவும் தூய்மையடைந்துள்ளது.

தாய்லாந்து தமது நாட்டில் "டுக் டுக்" என்றழைக்கப்படும் மூன்று சில்லு வாகனங்களுக்கு திரவநிலை வாயு எரிபொருளைப் பயன்படுத்தி வருகின்றது. புதுடில்லியிலும், மும்பையிலும் பஸ்களுக்கும் வாடகைக் கார்களுக்கும் டீஸலுக்குப் பதிலாக, பாதிப்புக் குறைந்த இயற்கை வாயு ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இநதச் செயற்பாடுகள் வாயுமண்டலம் அசுத்தமாவதை குறைப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளாகும்.

**சூழல் பாதுகாப்பு முதலீடுகள்**

ஆசிய வலயங்களின் சூழல் பாதுகாக்கப்படுவது தொடர்பாக, ஈடுபாட்டுடன் செயலாற்றிவரும் நிறுவனம் சூழல் பாதுகாப்புக்காகப் பெருமளவிலான கடனுதவியை வழங்கிவருகிறது. இச்செயற்பாடு தொடர்பாக நகர முக்கியஸ்தர்களை ஊக்குவிப்பதில் அந்நிறுவனம் ஈடுபட்டுள்ளது. எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படக்கூடிய சிறந்த முதலீடுகளாக, சூழல் தொடர்பான தொழில்நுட்பங்களே கருதப்படுகின்றன. அது சம்பந்தப்பட்ட அநேக தொழில் துறைகளுக்கான வாய்ப்புக்கள் ஆசியாவில் உருவாகலாமென்பது ஆசிய அமைப்பின் கருத்தாகும். மலேசியா, தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகள், ஏற்கனவே தமது சூழல் மாசடைதலைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக, அமெரிக்க நிறுவனத்தின் அனுசரணையைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளன.

இத்தகைய சூழல், தொழில்நுட்பங்களில் முன்னேற்றம் காணப்பட்டுவரும் அதேவேளை, சூழல் மற்றும் அது சம்பந்தப்பட்ட செயற்பாடுகளுக்கான வர்த்தகச் சந்தையும் உருவாக்கப்பட்டு வருகிறது. மலேஷியாவின் சூழல் தொடர்பான வர்த்தகச் சந்தை, 800 மில்லியன் டொலர் பெறுமானமுள்ளதாக வளர்ச்சியடைந்துள்ளது. இத்தொகையில் அதிக பகுதி சுத்தமான நீரைப் பெறுவது தொடர்பாகவே செலவழிக்கப்படுகிறது. கழிவுகள் அகற்றப்படுவதற்கான செயற்பாடுகளுக்கும் பெருமளவிலான தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. தாய்லாந்து சுத்தமான நீரைப் பெறுவதற்கும் மற்றும் கழிவகற்றும் செயற்பாடுகளுக்கும், 2020ஆம் ஆண்டளவில் 1.2 பில்லியன் டொலர் முதல் 1.5 மில்லியன் டொலர் வரையிலான தொகையைச் செலவிடவுள்ளது. வியட்நாம் 2003ஆம் ஆண்டில் மாத்திரம் சூழல் மாசடைவதைத் தவிர்ப்பதற்காக 450 பில்லியன் டொலர்களைச் செலவளித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**காடுகள் அழிதல்**

காடுகள் அழிந்து வருவதற்கு மேலதிகமாக பிறிதொரு முக்கிய சூழல் பாதிப்பாகக் கருதப்படுவது. வேகமாக காடுகள் அழிக்கப்படுவதாகும். தன்னகத்தே அதிக மழைவீழ்ச்சியைக் கொண்டுள்ளதும் உலகில் மூன்றாவது பரந்த பெரும் காட்டைக் கொண்டுள்ளதுமான இந்தோனேசியாவில், காடழிப்பு மிக வேகமாக இடம்பெற்று வருகிறது. பிரேஸில் மற்றும் கொங்கோ நாட்டைத் தவிர்ந்த பெரும் காட்டுப் பிரதேசங்களை இந்தோனேஷியா கொண்டிருந்தாலும் 1990 இற்குப் பின்னர், இந்தோனேஷியாவின் காடழிப்பு, பிரேஸிலின் காடழிப்புடன் ஒபபிடுகையில் சுமார் நான்கு மடங்கு அதிகரித்துள்ளது. இதற்கான முக்கிய காரணம், காடுகளை அண்டி குடியிருப்புக்கள் அதிகரிப்பதேயாகும். அதுபோன்றே, தேவையற்ற விதத்தில் காடுகள் கொளுத்தப்படுவதுமே ஏற்பட்டுள்ள முக்கிய சிக்கலாகும்.

ஒவ்வோர் ஆண்டிலும் இந்தோனேசியாவின் காடுகளுள், 2மில்லியன் ஹெக்டேயர் பரப்பளவுள்ள காடுகள் அழிந்து போகின்றன. இந்த வேகத்தில் காடுகள் அழிக்கப்படுமாயின் 2010ஆம் ஆண்டளவில், இந்தோனேஷியாவின் சுமாத்ரா மற்றும் கலிமன்தன் ஆகிய தீவுகளிலுள்ள காடுகள் பெருமளவில் அழியும் சாத்தியமுள்ளதாக சூழல் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இக்காடுகள் பெருமளவில் அழிக்கப்படுவதற்கு மரத் தேவை கருதி மரங்கள் தறிக்கப்படுவதே காரணமாகும். சில ஆண்டுகளுக்கு முன்னர், சீனாவிலும் இத்தகைய நிலை காணப்பட்டது. 1998இல் இடம்பெற்ற வெள்ளப் பெருக்கில் 400 பேர் இறந்தபின்னர் சீனாவில் காடழிப்புத் தடைசெய்யப்பட்டது.

**சரா**

ஆசியாவின் பெரும்பாலான நாடுகளிலுள்ள சூழல் தொடர்பான சட்டங்கள் மிகக் கடுமையானவையாகும். ஆயினும், அச்சட்டங்கள் அதேமுறையில் செயற்படுத்தப்படாமை சூழல் மாசடைதல் அதிகரிப்பதற்கு முக்கிய காரணமாகும். ஆசியாவிலுள்ள பெரும்பாலான நாடுகளைப் போன்று சிறிலங்காவின் நிலைப்பாடும் அத்தகையதே. பெரும்பாலான ஆசிய நாடுகள் இன்று எதிர்நோக்கும் நிலைமை சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் ஐரோப்பிய நாடுகளில் இருந்துள்ளது. ஐரோப்பிய நாடுகளில் இருந்துள்ள பெரும்பாலான குட்டைகள் மற்றும் நீர் நிலைகள், ஐரோப்பாவில் ஏற்பட்ட கைத்தொழில் முன்னேற்றத்தோடு மாசுபடுத்தப்பட்டன. இந்நிலை உணரப்பட்டதன் பின்னர் நீர், காற்று மற்றும் மண் மாசுபடுத்தப்படுவதைத் தடுப்பது தொடர்பாக 1970களில் பாரிய திட்டங்கள் ஐரோப்பிய நாடுகளில் செயற்படுத்தப்பட்டன. முழுமையாக மாசு படுத்தப்பட்டிருந்த நகரங்களைக் கொண்டிருந்த ஜேர்மனி போன்ற நாடுகளின் நகரங்கள் இன்று, மிகத் தூய்மையான நகரங்களாக மாற்ற மடைந்துள்ளன. இப்போதுமுதலே செயற்படுவோமாயின், எதிர்காலத்தில் உருவாகவுள்ள பெரும் அனர்த்தங்களிலிருந்து தப்புவதற்கு முயற்சிககமுடியுமென்பதற்கு, ஐரோப்பாவை உதாரணமாகக் கொள்ளமுடியும்; அதைச் செயலாக்கவும் முடியும்; அது செயற்படுத்தப்படவும் வேண்டும். ★

---

வடக்கு - கிழக்கு தமிழ், சிங்களப் பாடசாலைகளில்

## நிலவும் ஆசிரியர் வெற்றிடங்கள் 7,272; வழங்கப்பட்ட நியமனங்கள் 1,656

### கல்வி அமைச்சர் கருணாசேன தகவல்

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 7,272 ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

எனினும், 1,656 நியமனங்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன.

- இப்படிக் கூறினார் கல்வி, மனித வள பண்பாட்டலுவல்கள் அமைச்சர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்கு.

ஜே.வி.பி.உறுப்பினர் அனுர திஸாநாயக்க, கல்வி அமைச்சரிடம் வாய்மூல விடைக்கான கேள்வி ஒன்றினை எழுப்பினார்.

"வடக்கு - கிழக்கு மகாணங்களில்உள்ள தமிழ், சிங்கள பாடசாலைகளீல் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்கள் எத்தனை?

இதுவரை அங்கு எத்தனை பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது? "இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?"

"அங்கு பணியாற்றும் ஆசிரியர்களுக்கு சம்பள நிலுவைகள் வழங்கப்படவுள்ளதாக புகார் செய்யப்பட்டுள்ளது. அப்படியானால் அத்தொகை எவ்வளவு?"

- இப்படி அனுர திஸாநாயக்க எம்.பி. கல்வி அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார். இக்கேள்விக்குப் பதில் அளித்து, கல்வி அமைச்சர் கூறியதாவது:-

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளில் 6,671 மாகாணப் பாடசாலைகளிலும், 294 தேசிய பாடசாலைகளிலும் ஆசிரிய வெற்றிடங்கள் இருக்கின்றன.

சிங்களப் பாடசாலைகளுள் 265 மாகாணப் பாடசாலைகளிலும், 38 தேசிய பாடசாலைகளிலும் ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவுகின்றன.

மொத்தமாக 7,272 ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்காக 3,193 ஆசிரியர்களை நியமிப்பதற்கு 2000 ஆம் ஆண்டு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. ஆனால், இதுவரை 1,656 பேருக்கான நியமனங்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாண்டில் 253 பட்டதாரிக்கும், 284 தொண்டர் ஆசிரியர்களுக்கும் நியமனங்கள் வழங்கப்படும். மேலும் ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் சித்தியடைந்த ஆயிரம் பேர் போட்டிப் பரீட்சைகள் மூலம் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

அதேவேளை, மாகாண சபைககு ஒதுக்கப்பட்ட நிதியின் மூலம் 54 தமிழ் ஆசிரியர்களும், 32 சிங்கள ஆசிரியர்களும் நியமிக்கப்படவுள்ளனர்.

இதற்கும் மேலதிகமாக இவ்வாணடில் தேசிய கல்வியியற் கல்லூரிகளிலிருந்து வெளியேறும் 661 பேர் தமிழ்ப் பாடசாலைகளுக்கும், 84 பேர் சிங்களப் பாடசாலைகளுக்கும், நியமிக்கப்படுவர்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு சம்பள நிலுவையாக 16 கோடி ரூபா வழங்கப்பட வேண்டியுள்ளது. இவற்றைக் கட்டங்கட்டமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

- இப்படி அமைச்சர் தெரிவித்தார்.

---

## எவற்றைத் தனியார் மயமாக்குவது என்ற விவஸ்தையே இல்லாமல் போய்விட்டது!

### சின்க்கிறார் ரிச்சர்ட் பத்திரன எம்.பி.

கொழும்பு,ஜன.24

குடிதண்ணீர் விநியோகத்தைத் தனியாரிடம் ஒப்படைத்த அரசு, காலப்போக்கில் சுவாசிக்கும் காற்றையும் தனியாரிடம் ஒப்படைத்துவிடும் என்பதில் சந்தேகமில்லை. ஏற்கனவே காலி முகத்திடலையும் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு 9 கோடி 90 லட்சம் ரூபாவிற்கு விற்றுவிட்டது.

- இப்படி குற்றஞ்சாட்டினார் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினரான ரிச்சர்ட் பத்திரன.

காணி மீட்பு அபிவிருத்திக் கூட்டுத்தாபனத் திருத்தச்சட்டம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இப்படிக் கூறினார்.

ரிச்சர்ட் பத்திரன மேலும் கூறியதாவது:-

சதுப்பு நிலங்கள் தொடர்பாகக் கொண்டு வந்துள்ள திருத்தச்சட்டத்தை நான் வரவேற்கிறேன். ஆனால், அதற்கு இப்போது அவசியம் இல்லாமல் போய்விட்டது. காரணம், கொழும்பில் வடிகால்களும், கால்வாய்களும் மூடப்பட்டுள்ளன, பெரும் பகுதியான சதுப்பு நிலங்களில் மண் நிரப்பப்பட்டு கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

இந்த நாடாளுமன்றம் கூட சதுப்பு நிலத்திலேயே கட்டப்பட்டுள்ளது, முன்பு ஒருமுறை கடும் மழைபெய்த போது நாடாளுமன்றத்தின் அடித்தளத்திலும் நீர் நிறைந்துவிட்டது. கொழும்பு நகரில் அரைமணிநேரம் மழை பெய்தால் நகரம் நீரில் மூழ்கி விடுகிறது. காரணம், நீர்போக்கிகளும் வடிகால்களும் மூடப்பட்டுவிட்டன. சதுப்பு நிலங்கள் மண்நிறைக்கப்பட்டுள்ளதால் நீர் வடிய வாய்ப்புக்கள் இல்லை, காலம் கடந்தாவது அமைச்சர் இந்தத் திருத்தச்சட்டத்தைகொண்டு வந்ததற்காக மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆனால், தேசிய நீர் வழங்கல் சபை தொடர்பான திருத்தச் சட்டத்தை நாம் எதிர்க்கிறோம்.

இதன் மூலம் நீர்வழங்கல் சபை தனியார் மயப்படுத்தப்படவுள்ளது. இதனால் பல ஆயிரம் ஊழியர்கள் தொழில் இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இச்சட்டத்தை எதிர்த்து நீர் வழங்கல் சபை ஊழியர்கள் சபையின் முன் நோட்டம் செய்துள்ளனர். எனவே, தேசிய நீர்வழங்கல் சபையைத் தனியாரிடம் ஒப்படைக்கும் திட்டத்தை அரசு கைவிடவேண்டும்.

- இப்படி வலியுறுத்தினார் ரிச்சர்ட் பத்திரன.

# பௌத்தத்துக்கு எதிரான அமைப்புக்களை தடை செய்யுமாறு பிக்குமார் கோரிக்கை

கொழும்பு, ஜன.24

பௌத்த மதத்துக்கு எதிரான அரசார்பற்ற நிறுவனங்களைத் தடை செய்யுமறு தேசிய பிக்குமார் முன்னணி என்ற அமைப்பு ஜனாதிபதியைக் கோரியுள்ளது.

இத்தகைய நிறுவனங்கள் அரசாங்கத்துக்கும் பௌத்த மதத்துக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என்றும அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது.

மேற்படி அமைப்பைச் சேர்ந்தவர்கள் நேற்று முந்தினம் புறக்கோட்டையிலுள்ள விகாரை ஒன்றிலிருந்து ஊர்வல மாகச் சென்று ஜனாதிபதியின் சிரேஷ்ட துணைச்செயலாளரிடம் இது தொடர்பான மகஜர் ஒன்றினைக கையளித்தனர்

(ம-4)

## கூட்டுறவு விழிப்புணர்வு பிரசாரம்

தென்மராட்சி,ஜன.24

கூட்டுறவு மாதத்தினையொட்டி தென்மராட்சி மேற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினர் சங்க எல்லைப் பரப்பிலுள்ள மக்களிடையே கூட்டுறவு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தீவிர பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஒலிபெருக்கி மூலம், கூட்டங்களை நடத்தியும்,பணியாளர்கள் வீடுவீடாகச் சென்று புதிய அங்கத்தவர்களை இணைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

## கலாநிதி எஸ்.சிவலிங்கராஜாவின்

யாழ்ப்பாணத்து வாழ்வியற் கோலங்கள்

## நூல் வெளியீட்டு விழா

தலைமை: திரு.க. அம்பலவாணர் (கோட்டக்கல்வி அதிகாரி)

காலம்: நாளை (25.01.2004) ஞாயிற்றுக்கிழமை

காலை 10.00 மணி (இலங்கை நேரம்)

இடம்: நெல்லை முருகன் திருமண மண்டபம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கலாசாரக்கூட்டுறவுப்பெருமன்றம்

கட்டைவேலி, நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

(27459) (26)

விளம்பர அன்பளிப்பு:

பட்டப்படிப்புக்கள் கல்லூரி


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட டாக்டர்கள் சிபார்சு செய்வது

றோயல் குளுக்கோஸ்

100/%

சுத்தமானது!

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல் றோயல் குளுக்கோஸ் தாருங்கள் ! என்று கேட்டு வாங்குங்கள்

Packed By:

Royal Industries, Colombo.

☎ 0112334603

சத்திரத்துச் சந்திக்கு அருகில் ⇨






ஏக விநியோகத்தர்கள்:

சிவா நறுமணப் பூங்கா

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

☎: 021 222 2567



ENGILISH, MATHS CLASSES

Toefl Spoken English, கணிதமும் தரம் 6 இலிருந்து O/L, A.B.C பெறுபேறடையவும் 2004A/L G.A.Q. துரிதமாக ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப் படும்.

தொடர்பு: இல.85, சிவன் கோயிலடி, மேற்கு வீதி, திருநெல்வேலி

(27494)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள் இணைஅதிபராக கடமையாற்றிய

### தம்பியப்பா தர்மலிங்கம்

அவர்கள் இயற்கையெய்தியமையையிட்டு நாங்கள் மிகவும் துயரமடைவதுடன் அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம். (27491)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள். (26)

## 31ஆம் நாள் துயர் பகிர்வு



திருமதி சுமதி சத்தியவரதன்

எமது பாடசாலையில் முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றிய திருமதி சுமதி சத்திய வரதன் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் உறவுகளுடன் துயரத்தை நாமும் உணர்வுகளால் பகிர்ந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

கிளி/முழங்காவில் ம.வி.

அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள்.

(27317)(35)

## நீங்காத நினைவலைகள்

4ஆம் ஆண்டு



மலர்வு 29 - 11 - 1913

உதிர்வு 24 - 01 - 2000

அமரர்

மனுவல் மிக்கேல்பிள்ளை

8ஆம் ஆண்டு



மலர்வு 02 - 02 - 1923

உதிர்வு 17 - 02 - 1996

அமரர்

மரியப்பிள்ளை மிக்கேல்பிள்ளை

"பாசமாய் எமைப் பெற்று இவ்வுலகில்
நேசமாய் எமை வளர்த்தாளாக்கிய
பாசமிகு தீபங்களே – எமக்கு
நீங்காது உம் நினைவுகள்"

32, சென்.பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

(27429)

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.


# மக்கள் வங்கி

மக்கள் வங்கியின் சாவகச்சேரிக் கிளையிலும், யாழ்/பல்கலைக்கழகக் கிளையிலும் (முன்னைய யாழ்/ நவீன சந்தைக் கிளையிலும்) 31.12.1984 இற்கு முன்பு அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் யாழ்/ஸ்ரான்லி வீதிக்கிளையில் வைத்து

## பகிரங்க ஏல விற்பனை 'செய்யப்படும்

| கிளைகளின் விவரம் | ஏலம் விடப்படும் திகதிகள் | ஏலம் செய்யப்படும் இடம் |
|---|---|---|
| சாவகச்சேரி | 14.02.2004இல் இருந்து 16.02.2004வரை | யாழ்/ஸ்ரான்லி வீதிக்கிளை |
| யாழ்/பல்கலைக்கழகக் கிளை (முன்னைய யாழ்/நவீன சந்தைக் கிளை | 21.02.2004இல் இருந்து 23.02.2004வரை | யாழ்/ஸ்ரான்லி வீதிக்கிளை |

மக்கள் மனமறிந்த வங்கி

மக்கள் வங்கி

PEOPLE'S BANK

பிரதேச முகாமையாளர்,
மக்கள் வங்கி,
யாழ்ப்பாணம்.

(C/32899)

# ஜனாதிபதியுடன் ஒப்புக்கு ஒட்டிக் கொண்டிருக்கும் 'நுஆ' அவரிடம் தேவையானவற்றை தட்டிக் கேட்பதற்கு தயாரா?

## சேகு இஸ்ஸதீன் மீது சிவாஜிலிங்கம் பாய்ச்சல்

ஜனாதிபதியுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் தேசிய ஐக்கிய முன்னணி (நு-ஆ) தலைவர்கள் வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு தமிழ் பேசும் ஒருவரை ஆளுநராக நியமிக்கும்படி ஜனாதிபதியிடம் கேட்பார்களா?

இப்படி ஒரு கேள்வியை எழுப்பினார் யாழ். மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டணி உறுப்பினரான சிவாஜிலிங்கம்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் உள்நாட்டு இறைவரிகள் திருத்தச்சட்ட வரைவு தொடர்பான விவாதம் நடைபெற்றது. அப்போதே சிவாஜிலிங்கம் தேசிய ஐக்கிய முன்னணி உறுப்பினரான சேகு இஸ்ஸதீனிடமே மேற்கண்டவாறு கேட்டார்.

சேகு இஸ்ஸதீன் எம்.பி. பேசும்போது, "வடக்கு - கிழக்கு மாகாண சபை 99 வீதம் தமிழர்களின் கட்டுப்பாட்டிலேயே இருக்கிறது. அங்கு முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் இல்லை. முஸ்லிம்கள் அரசியல் அநாதைகளாக்கப்பட்டுள்ளனர் என்றார்.

"1990ஆம் ஆண்டு முன்னாள் முதல்வர் வரதராஜப்பெருமாள தன்னிச்சையாக தமிழீழக் குடியரசைப் பிரகடனப்படுத்திய பின்னர் மாகாண சபையில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் ஒழிக்கப்பட்டுள்ளது. இன்றுவரை அது பிற்போடப்பட்டே வருகிறது.

"2002ஆம் ஆண்டில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், தமிழ்க் கட்சிகளினதும் புலிகளினதும் கோரிக்கையின் பேரில் இத்தேர்தல் பிற்போடப்பட்டது. தொடர்ச்சியாக உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் பின்போடப்பட்டு வருவதால் அங்கு முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் தடுக்கப்பட்டுள்ளது" என்றும் சேகு இஸ்ஸதீன் குற்றஞ்சாட்டினார்.

இந்தச் சந்தர்ப்பத்திலேயே சிவாஜிலிங்கம் எம்.பி. குறுக்கிட்டு உங்களுடைய ஜனாதிபதியுடன் பேசி வடக்கு - கிழக்கு மாகாண சபைகளுக்கு தமிழ் பேசும் ஒருவரை ஏன் ஆளுநராக நியமிக்கக்கூடாது? என்று கேட்டார்.

நாம் ஜனாதிபதியுடன் இது தொடர்பாகப் பேசி வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு தமிழர் ஒருவரை ஆளுநராக நியமித்தால் ஒரே நேரத்தில் எல்லாப் பகுதிகளிலும் தேர்தலை நடத்துவீர்களா? என்று சிவாஜிலிங்கம் எம்.பியிடம் எதிர்கேள்வி ஒன்றை தொடுத்தார் சேகு இஸ்ஸதீன்.

"தமிழரை ஆளுநராக நியமிக்கும்படி நாம் கோரவில்லை. தமிழ் பேசும் ஒருவரை நியமிக்கும் படியே கேட்கிறோம். முஸ்லிம் ஒருவரை ஆளுநராக நியமித்தாலும், அதற்கு 'நாம் ஆதரவு வழங்குவோம்" - என்றார் சிவாஜிலிங்கம்.

தொடர்ந்து பேசிய சேகு இஸ்ஸதீன் -

"பெப்ரவரி 21 ஆம் திகதி அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களுக்கு மட்டும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படும் என தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார். இதனை நாம் வன்மையாக எதிர்க்கிறோம்.

"கிழக்கு மாகாணம் இப்பொழுது முற்றாக அரசின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. எனவே, தனியே சிங்களப் பிரதேசத்திற்கு மட்டும் தேர்தலை நடத்தாமல் கிழக்கு மாகாணம் முழுவதற்கும் தேர்தலை நடத்தவேண்டும்" என்றார் அவர்.

உள்நாட்டு இறைவரிகள் சட்ட வரைவு தொடர்பான விவாதம் நடைபெற்றபோது சேகு இஸ்ஸதீன் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் தொடர்பாகப் பேசித் தீர்த்துவிட்டார்.

விவாதத்தின் பெரும் பகுதி ஜே.வி.பி - சுதந்திரக்கட்சி கூட்டு ஒப்பந்தம் தொடர்பானதாகவே காணப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான ரவிராஜ் விவாதத்திற்கு சூடேற்றினார். அவர்விட்ட குறையில் இருந்து நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் வெளுத்து வாங்கினார்.

"வெளிநாட்டவர்களை குறிப்பாக வெள்ளையர்களை வன்மையாகக் கண்டிக்கும் ஜே.வி.பியினரின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க உயிருக்குப்பயந்து நாட்டைவிட்டு ஓடியபோது அவருக்கு அடைக்கலம் கொடுத்தவர்கள் வெள்ளையர்கள்தான். இன்றும் அவர் லண்டனில் மகாராணியாரின் புடைவையில் குளிர்காய்கின்றார், இதையும் கண்டிக்கவேண்டுமே" என்று சாடினார் ரவிராஜ்.

"நாட்டைக் காப்போம் என்று கூறிக்கொண்டு கூட்டு ஒப்பந்தம் செய்திருப்பவர்களின் நோக்கம் ஆட்சியைக் கைப்பற்றுவதே" என்றும் அவர் குற்றஞ்சுமத்தினார்.

நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் பேசும் போது- "ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக் காலத்தில் நாட்டில் காணப்பட்ட வறுமையை விமர்சித்தார்.

"ஜே.வி.பியினரும் சுதந்திரக் கட்சியினரும் செய்துகொண்டது 'அவசரக்கலியாணம்'. இது இடையில் முறிந்துவிடும்" என்றார் அமைச்சர் அஸ்வர்.

பிரதிநிதி அமைச்சர் பந்துல குணவர்த்தன மட்டும் திருத்தச்சட்ட வரைவு தொடர்பாகப் பேசினார். "ஜே.வி.பியினரைப் போன்று அழகான போஸ்டர்களை எல்லோராலும் ஒட்டமுடியும். ஆனால், அதில் உள்ள வாசகங்களை எவராலும் நிறைவேற்ற முடியாது" என்று சுட்டிக்காட்டினார் அவர்.

இறுதியாக உள்நாட்டு இறைவரி திருத்தச்சட்ட வரைவு நிறைவேற்றப்பட்டது.




## ஜே.வி.பியினருடனான கூட்டு: ஸ்ரீல.சு.கவினருக்கே ஆப்பு!

### ஜயலத் ஜயவர்த்தன கருத்து

ஜே.வி.பியினரும் ஸ்ரீல.சு.கட்சியும் சேர்ந்து உருவாக்கி உள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தவறுதலாகவாவது ஆட்சிக்கு வந்துவிட்டால், "அவர்கள் உலக வங்கியினதும், சர்வதேச நாணய நிதியத்தினதும் உதவி தேவை இல்லை என்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இங்கு வரக்கூடாது என்றும் வெளிப்படையாக அறிவிக்கத் தயார். ஜே.வி.பியுடனான கூட்டு ஸ்ரீல.சு.கவுக்குத்தான் ஆப்பு.

- இப்படிப் புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்தல் அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

உலக வங்கியையும், சர்வதேச நாணய நிதியத்தையும் ,வெளிநாட்டு முதலீட்டாளர்களையும் கண்டிப்பவர்கள் ஜே.வி.பியினர்.

சோமவனச அமரசிங்க ஒரு தேசத்துரோகி, உயர் நீதிமன்றம் அவருக்குப் பிடியாணை பிறப்பித்துள்ளது. ஆனால், இந்த நாட்டின் ஜனாதிபதி ஒரு தேசத்துரோகியுடன் ஒரே மேடையில் தோன்றுவார் என ரூபவாஹினி பிரசாரப்படுத்துகின்றது.

ஸ்ரீல.சு.கட்சியின் மூத்த தலைவர்களையும், பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களையும், பிக்குமார் உட்பட புத்திஜீவிகளையும் கொலை செய்தவர்கள் ஜே.வி.பியினர்.

தலதா மாளிகையைத் தாக்கி தலதா பெரஹராவையே நடத்த விடாமல் தடுத்தவர்கள் அவர்கள்.

இப்பொழுது போதி மாதவன் போல் நீலிக்கண்ணீர் வடிக்கின்றனர். இதை ஜனாதிபதி உணரவேண்டும்.

ஜே.வி.பியினருக்கு நாட்டின் அபிவிருத்தியில் அக்கறை இல்லை. உள்நாட்டுக் குழப்பங்களை ஏற்படுத்தி நாட்டில் வறுமையையும் பட்டினியையும் உருவாக்கியாவது ஆட்சிக்கு வரவேண்டும் என்பதே அவர்களுடைய நோக்கம். ஜே.வி.பியினரின் கூட்டு ஸ்ரீல.சு.கட்சிக்கே ஆப்பு வைத்துவிடும் என்பது உறுதி.

- இப்படி அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன கூறினார்.

## படுபாதகக் 'கிரிமினல்' சோமவன்ஸவுக்கு செங்கம்பள வரவேற்பளிக்கிறார் ஜனாதிபதி

### தமிழ்த்தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் ரவிராஜ் விசனம்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஜே.வி.பியுடன் கூடி சமாதான முயற்சிகளுக்கு சாவுமணி அடித்துவிட்டார்.

கொலைகளைச் செய்துவிட்டு நாட்டைவிட்டுத் தப்பிஓடி லண்டனில் குளிர்காயும் சோமவன்ஸவுக்கு அதே ஜனாதிபதி செங்கம்பள வரவேற்பு அளிக்கிறார்.

- இப்படி தமிழ் தேசியக் கூட்டணி யாழ். மாவட்ட எம்.பி.ரவிராஜ் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

சோமவன்ஸ பல கொலைகளுடன் தொடர்புடையவர். தேசிய சொத்துக்களுக்கான தேயிலை தொழிற்சாலைகளையும் அரச கட்டடங்களையும் தீவைத்து கொளுத்தி நாசப்படுத்தியவர்.

மன்னர் காலத்தில் அமைக்கப்பட்ட பல அணைக்கட்டுக்களைத் தகர்த்தவர். நீதிமன்றத்தால் தேடப்படும் ஒரு பயங்கரக் குற்றவாளிதான் சோமவன்ச. ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சோமவன்ஸவைக் கைதுசெய்வாரா?

அதேவேளை, ஜே.வி.பியினரால் கொல்லப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியலையும் எரிக்கப்பட்ட தொழிற்சாலைகளினதும் விவரங்களை ஜனாதிபதி வெளியிடுவாரா?

ஜனாதிபதிக்கு தமிழர்களின் பிரச்சினையை தீர்க்கவேண்டும் என்பதில் அக்கறையில்லை. ஜனாதிபதியின் தாயார் ஸ்ரீமாவோ பண்டாரநாயககவின் குடியுரிமை பறிக்கப்பட்டபோது அவருக்கு ஆதரவாகக் குரல் எழுப்பி வாதிட்டவர்கள் தமிழர்கள்தான். இந்த ஒன்றினைக்கூட மறந்துவிட்டார் ஜனாதிபதி.

ஆனால் தனது கணவனைக் கொலை செய்தவர்களுடன் ஜனாதிபதி சந்திரிகா கைகோர்த்துக்கொண்டுள்ளார். இது தமிழ் மக்களுக்கு அவர் செய்யும் துரோகம்.

சோமவன்ஸ கடவுச்சீட்டு இல்லாமல் நாட்டைவிட்டுத் தப்பிஓடிய ஒரு துரோகி. இவருக்குச் செங்கம்பள வரவேற்பு அளிக்கின்றனர். சில மானம் கெட்ட தமிழர்கள் இவர்களுக்கு குடை பிடித்துக் கொண்டு இருக்கின்றனர்.

இவர்களை தமிழர்கள் என்று சொல்வதே வெட்கக்கேடு. "கூட்டு ஒப்பந்தம் பற்றித் தமக்கு எதுவுமே தெரியாது. தோழமைக் கட்சியான எங்களுடன் இவ்விடயம் தொடர்பாக எதுவுமே கலந்துரையாடப்படவில்லை" -என்றார் நண்பர் ஹிஸ்புல்லா.

ஆனால், இவருடைய தலைவி ஒப்பந்த வைபவத்தில் கலந்துகொள்கின்றார். இவர்கள் இனிமேலும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் ஒட்டிக்கொண்டிருக்கவேண்டுமா? அது ஒரு வெட்கமான செயலாகத் தெரியவில்லையா?

கூட்டு ஒப்பந்தம் செய்தவர்கள் சமாதான முயற்சிகளை தொடர்வோம் என்று பிதற்றுகின்றனர். சமாதானப் பேச்சு நடத்தப் பரஸ்பர புரிந்துணர்வும் நம்பிக்கையும் அவசியம். அதிகாரத்தின் மூலமோ பலாத்காரமாகவோ சமாதானம் பேச முடியாது என்பதை இவர்கள் உணரவேண்டும்.

வடபகுதி மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்பவர்கள், இப்போது விவசாயக் காணிகளுக்குத் தேவையான நன்னீர் உவர்நீராக மாறிவருகின்றது.

கடல் நீர் விவசாயக் காணிகளுக்கு வரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அதனைத் தடுக்கப் பாரிய அணைகள் கட்டப்பட வேண்டும். பொருளாதாரத் தாக்கம் ஏற்பட்டுள்ள இந்த வேளையில் உள்நாட்டு வருமானத்தில் இதனைக் கட்ட முடியாது. வெளிநாட்டு உதவிகள் தேவை . நாட்டில் சமாதானம் ஏற்பட்டாலே வெளிநாட்டு உதவிகள் கிடைக்கும்.

எனவே நாட்டின் தேசிய நலன் கருதி ஜனாதிபதி சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாக இருக்கக் கூடாது .

- இப்படி ரவிராஜ் எம்பி. கோரிக்கை விடுத்தார்.

## சமாதான வயலில் அறுவடைக்குக் காத்திருந்தபோது அதில் எருமைகளை விரட்டிவிட்டுள்ளார் ஜனாதிபதி

### நீதி அமைச்சர் லொக்கு பண்டார சாடுகிறார்

பிரதமர் கடந்த இரண்டு வருடங்களாக யுத்தத்தை நிறுத்தி, சமாதான வயலில் அறுவடைக்காகக் காத்திருந்தபோது, அதில் எருமைகளை விரட்டிவிட்டுள்ளார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

- இவ்வாறு நதி அமைச்சர் லொக்கு பண்டார கூறினார்.

காணி மீட்பு அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், தேசிய நீர்வழங்கல் வடிகால் சேவைகள் தொடர்பான திருத்தச் சட்டங்கள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இப்படிக் கண்டித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

எதிர்க்கட்சியினர் இந்தச் சட்டத் திருத்தங்களை எதிர்ப்பது வேடிக்கையானது. முன்பு அமைச்சர்களாக இருந்த இந்திக குணவர்த்தனவும் மங்கள சமரவீரவும்தான் இந்தச் சட்டங்களை முன்வைத்தனர் என்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள் போலும்.

நண்பர் ரிச்சர்ட் பத்திரன மூத்த அரசியல்வாதி; ஒரு சிறந்த ஆசிரியர். ஆனால், இப்போது குழந்தைப் பிள்ளைத்தனமாகப் பேசுகின்றார். 70 வயதைத் தாண்டிவிட்டார். புத்தி மறுப்பக்கம் வேலை செய்யும் என்பார்கள். அந்த நிலைதான் நண்பருக்கு ஏற்பட்டுள்ளதுபோல.

இப்பொழுது அவர் எந்தக் கட்சியின் பிரதிநிதியாகப் பேசுகின்றார் என்பதே அவருக்குத் தெரியாது.

, கம்யூனிஸ்ட் கட்சியினரும், சமசமாஜிகளும் என் கணவரைக் கொல்லாமல் கொன்றவர்கள் என்று முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க கூறினார்.

இப்போது ஜனாதிபதி சந்திரிகா தனது கணவரைப் படுகொலை செய்தவர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளார்.

ஜனாதிபதியின் நோக்கம் நாட்டை அபிவிருத்தி செய்வதல்ல; எந்த குறுக்குவழியில் சென்றாவது அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ள வேண்டும்; ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்பதே.

கடந்த ஆட்சியின்போது திறைசேரியின் பணத்தைக் கொண்டு தேர்தல் பிரசாரம் செய்தனர். நாட்டின் வரலாற்றிலேயே 31 மேலதிக செலவினங்களுக்கான குறைநிரப்பு பிரேரணைகளை சமர்ப்பித்து நாட்டில் பொருளாதாரத்தை குட்டிச்சுவராக்கினர்.

முன்பு ஸ்ரீல.சு.கட்சி 'கை' சின்னத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. இப்போது கையை இழந்து நாற்காலியையும் இழந்துவிட்டது. ஆனால், இக்கட்சிக்கு தலைமை தாங்க பண்டாரநாயக்க பரம்பரையைவிட்டால் வேறு எவரும் இல்லை. ஏனெனில் தலைமையை மாற்ற சந்திரிகா விடமாட்டார்.

ஆனால், அன்றும் இன்றும் எங்கள் கட்சியின் சின்னம் யானைதான். தலைவர்கள் மாறினாலும் கட்சியின் சின்னம் மாறாது.

சுதந்திரக்கட்சி அழிந்தாலும் பாதகம் இல்லை. தனக்கு அதிகாரம்தான் தேவை என்பதே ஜனாதிபதியின் நோக்கம்.

நாட்டு மக்கள் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்றே ஆணை வழங்கி உள்ளனர். அதன் அடிப்படையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த இரண்டு வருடங்களாக நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தி உள்ளார். சமாதானத்தின் பயனை அறுவடை செய்யும் வேளையில் ஜனாதிபதி வயலுக்குள் எருமை மாடுகளை விரட்டிவிட்டார். மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கவும் தடைபோட்டுவிட்டார்.

ஜனாதிபதி ஆட்சியைக் கைப்பற்ற எத்தனை திட்டங்களை வகுத்தாலும் மக்கள் சக்தியுடன் அதனை முறியடிப்போம். தொடர்ந்தும் ஐக்கிய தேசிய முன்னணியின் கொடி உயர்ந்தே பறக்கும்.

- இப்படி அவர் கூறினார்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கரம்பொன் கிழக்கைப் பிறப்பிடமாகவும்
சித்தன்கேணியில் வசிப்பவருமாகிய

### கதிரவேலு சிவயோகராணி

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி திருமதி S.நந்தசேகரன் முன்னிலையில் 19-01-2004 அன்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் உயர்கல்லூரி, உடுவில் மகளிர் உயர் கல்லூரிகளின் முன்னாள் ஆசிரியையும் தற்பொழுது அறநெறி, பண்ணிசை ஆசிரியையும் ஆன்மீக சொற்பொழிவாளரும் இசை நிகழ்ச்சிகள் ஆற்றுபவரும் வானொலி, ரூபவாஹினி, யாழ்.சேவை நிகழ்வுகளில் பங்காற்றி பலரது நன்மதிப்பினையும் பாராட்டுதல்களையும் பெற்றவருமாவார்.

இவருடைய சமூக, சமயப்பணிகள் மேன்மேலும் வளர நாகபூஷணி அம்பாள் அருளை வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்கள்:

*கந்தரோடை ஓம் ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய சகோதரி குடும்பத்தினர்.*
*மூத்த சகோதரர் – S.K.சிவபாலன். இசைப்பேராசிரியர் – சிதம்பரம்.*
*இளைய சகோதரர் – உமாபாலன் குடும்பத்தினர்.*

(27490) (19-21-13-16)

## பாராட்டுக்களும், வாழ்த்துக்களும்



மானிப்பாயைச் சேர்ந்தவரும்,
எமது கணனி விரிவுரையாளருமான

### திரு.செ.செல்வதாஷன்

என்பவரால் முதன்முதலில் தமிழில் உருவாக்கப்பட்ட "The Tamil Encyclopedia of Body - Biology-I" எனும் கல்விசார் கணனி மென்பொருளினை 19-01-2004 அன்று கொழும்பிலும். கண்டியிலும் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளதையிட்டு எமது பாராட்டுக்களையும். வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

AD-IT Super.Com நிறுவனமும்,
BIT 3 ஆம் வருட, MCSE II
மாணவ நண்பர்களும்.
கொழும்பு, கண்டி.

(27510)
(34-21-13-16)

## நன்றி கூறி வாழ்த்துகின்றோம்



எமது முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்பு நிதியாக ரூபா 7.00.000 ஐ தந்து உதவியமைக்காகவும் முன்பள்ளிகளுக்கு மலசலகூடங்களை அமைப்பதற்கு சிமெந்து தந்துதவியமைக்காகவும்.

கௌரவ இந்து கலாசார அமைச்சர்

### திரு. தி.மகேஸ்வரன்

அவர்களை நன்றியுடன் பாராட்டுகிறோம். அவரது சேவை மேலும் தொடர இறைவனது ஆசியை வேண்டுகிறோம்.

*முன்பள்ளி ஆசிரியர்கள்*
*வலிகாமம் மேற்கு.*

(27457)
(34-21-13-16)

## கண்ணீர் அஞ்சலி

மலர்வு 23 - 12 - 1948



உதிர்வு 19 - 01 - 2004

### அமரர் முருகர் கந்தையா

(நில அளவைத்திணைக்களம், வவுனியா)

*தொடரும் நினைவுகளில்.........*

காலவெள்ளத்தில்
கரைந்து போனது - உனது முகம்
கரையவில்லை
உனது நினைவுகள்
உன்னால் செதுக்கப்பட்ட - சமூகம்
மலர்ந்து கொண்டே இருக்கிறது
காலச்சுவடுகளில் - நீ
நடந்த பாதைகளில் - இன்று
நாங்கள் நடக்கின்றோம்
உன் நினைவுகளை
சுமந்து செல்லும் - தென்றல்
உன் உயிர்மூச்சு பட்டதால்
தூய்மையாகி விட்டது
தூயவனே - நீ
காலமெல்லாம் எம்முடன்
வாழ்வது
தொடராக....... தொடராக
முடிவுபெறாத
தொடராக....
சாந்தி பெறுக.

*லண்டன்.* *கமலன், கவிதா.*

(27465)(34-21-13-16)

# இலங்கையில் இடம்பெயர்ந்தோர் விவகாரம்: உலக வங்கிப் பிரதிநிதிகள் – ஜயலத் பேச்சு

கொழும்பு,ஜன.24

உலக வங்கியின், இலங்கைக்கான வீடமைப்பு நிர்மாணப் பணிகளுக்கான பிரதிநிதிகளை அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன கடந்த 20ஆம் திகதி தமது அமைச்சில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாகப் புனர்வாழ்வு, மீள்குடியமர்த்துகை அமைச்சு விடுத்துள்ள ஊடகக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

உலக வங்கிக் குழுவில் பீற்றர் கரோல்ட் தலைமையில் றோபோட் மவ்வர், பொப்புக்கிலி, லொக்சிக்குயா, நிராஜ் வர்மான, நாராயணன் எடான், றொபின் ராஜாக், நரேஸ் துரைசுவாமி ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

வடமாகாணம் மற்றும் ஏனைய எல்லைப்புற மாவட்டங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்கென ஏழரைக்கோடி அமெரிக்க டொலர் தேவைப்படுவதாகவும், அதனைத் தந்துதவுமாறும் அமைச்சர் உலக வங்கிப் பிரதிநிதிகளிடம் கோரிக்கைவிடுத்தார்.

அகதிகள் பலர் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர விரும்புவ்தால் அவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு இந்த நிதியை விரைவில் வழங்குமாறும் அமைச்சர் உலக வங்கித் தூதுக்குழுவினரிடம் கேட்டுக்கொண்டார்.

இந்த நிதியைப் பயன்படுத்துவதற்காக முறையான கட்டமைப்பு ஒன்று இருக்கவேண்டியதன் அவசியத்தை உலக வங்கி தூதுக்குழுவினர் வலியுறுத்தினர். புனர்வாழ்வு அமைச்சின் செயலகங்கள், மாவட்டங்கள் தோறும் இயங்கிவருவதால், அவற்றின் மேற்பார்வையில் இந்நிதியினைப் பயன்படுத்தலாம் என அமைச்சர் ஆலோசனை கூறினார். இலங்கையில் இடம்பெயர்ந்தோர், அவர்களுக்கான புனர்வாழ்வுக்குப் பொறுப்பாக இருக்கும் அமைச்சு என்ற வகையில் அமைச்சரின் இந்தக் கோரிக்கையைத தாம் பரிசீலித்துச் சாதகமான ஒரு முடிவினைப் பெற்றுத்தருவதாகத் தூதுக்குழுவினர் தெரிவித்தனர்.

உலக வங்கி வழங்கும் இந்நிதியைக் கொண்டு புனரமைக்கப்படும் வீடுகளில் குடியிருப்பதற்குத் தகுதியானவர்களைத் தெரிவுசெய்யுமாறு அமைச்சர் தமது செயலாளருக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார். முக்கியமாக மாதாந்தம் 2500 ரூபாவுக்குக் குறைந்த வருமானம் பெறுவோரை இத்திட்டத்தில் இணைத்துக்கொள்ளுமாறும் அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். இதுதொடர்பாக உலக வங்கித் தூதுகுழுவினருடன் மீண்டும் அடுத்த வாரம் சந்தித்துப் பேசுவது எனவும் இச்சந்திப்பில் முடிவு எடுக்கப்பட்டது.

- இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரிவுபசார விழா

தென்மராட்சி,ஜன.24

தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 22 வருடங்களாக பொதுமுகாமையாளராகக் கடமையாற்றி இளைப்பாறிச் செல்லும் க.சற்குருநாதனுக்கு சங்கப் பணிப்பாளர்களும் பணியாளர்களும் இணைந்து நடத்தும் பிரிவுபசார விழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறுமென சங்கப பொதுமுகாமையாளர் சி.தேவகுமார் தெரிவித்தார்.

(ம-117)

## மூலதன நிதி ஒதுக்கீடு

வலிகாமம் தெற்கு,ஜன.24

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் செயற்பாடுகளுக்கென வடக்கு - கிழக்கு மாகாண சபையினால் 2003ஆம் ஆண்டுக்குரிய மூலதன நிதி ஒதுக்கீடாக ஒரு லட்சத்து 23 ஆயிரத்து 348 ரூபா கிடைத்துள்ளது.

சனசமூக நிலையங்களுக்கான நன்கொடை நிதியாக 68 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வலி.தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட நூலகங்களுக்கென 20 ஆயிரத்து 956 ரூபாவும், மகப்பேற்று நிலையங்களுக்கென 15 ஆயிரத்து 564 ரூபாவும், சுகாதார சேவைகளுக்காக 18 ஆயிரத்து 828 ரூபாவும் நிதி வழங்கப்பட்டுள்ளது. (ஐ-152)

## மாவிலைத் தத்தியை கட்டுப்படுத்துதல் பற்றி விளக்கம்

வலிகாமம் தெற்கு,ஜன.24

உடுவில் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட உடுவில் மத்தி விவசாய சம்மேளனத்தின் அனுசரணையுடன் உடுவில், மல்வம் பகுதியில் உள்ள தா.பத்திநாதர் என்பவருடைய தோட்டத்தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பகல் 11 மணியளவில் மாமரங்களின் மாவிலைத் தத்தி நோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பான மருந்துவிசிறல் நிகழ்வும், கருத்தரங்கும் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் தற்போது மாமரங்கள் யாவும் பூக்கும் காலமாகும். இக்காலத்தில் மாம்பூக்களில் மாவிலைத் தத்தி என்னும் பூச்சிகளின் தாக்கமும் அதிகரிக்கும். இத்தாக்கத்தை கட்டுப்படுத்த கமநல சேவை திணைக்களம் மருந்து விசிறும் பணியை மேற்கொண்டு வருகின்றது.

உடுவிலில் நடைபெறவுள்ள கருத்தரங்கும், மாவிலைத்தத்திக் கட்டுப்பாட்டு மருந்து விசிறும் நடவடிக்கையும் உடுவில் கமநல சேவை நிலைய விவசாயப் போதனாசிரியர் தலை மையில் இடம்பெறும்.

(ஐ-152)

## கிளைக் குழு உறுப்பினர் தெரிவு

சண்டிலிப்பாய்,ஜன.24

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 16 கிளைகளுக்குமான பொதுச்சபைக் கூட்டங்களும், கிளைக் குழு உறுப்பினர் தெரிவும் இன்று சனிக்கிழமை முற்பகல் அந்தந்தக் கிளைகளில் நடைபெறவுள்ளன.

கிளைக் குழு உறுப்பினர்களாக ஒன்பது பேர் இக்கூட்டங்களில் தெரிவு செய்யப்படுவார்கள். இக்கூட்டங்களை நடத்துவதற்கான ஏற்பாடுகளை யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செய்துள்ளார்.(ஐ-135)

## அந்தியேட்டி அழைப்பு

உ
ஸ்ரீ மீனாட்சி அம்பாள் துணை
விராட் விஸ்வப்பிரம்மனே நம

பிறப்பு 19 - 04 - 1935



இறப்பு 27 - 12 - 2003

கடந்த 27.12.2003 சனிக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பக் குலவிளக்கு

### அமரர் நாகமணி சிவானந்தம்

(ஆனந்தம் மெக்கானிக்)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியை இன்று (24.01.2004) கீரிமலையிலும், வீட்டுக்கிருத்தியம் நாளை மறுதினம் (26.01.2004) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் அன்றைய மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்பர்கள், நண்பர்கள், உற்றார், உறவினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

☞ இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

மனைவி,
மகள், மருமகன்.

*சாரதா வீதி,*
*சங்கத்தானை, சாவகச்சேரி.* (27482) (34-21-13-16)

## மரண அறிவித்தல்கள்

### தம்பியப்பா தர்மலிங்கம்

(இணை அதிபர், மயிலிட்டி றோ.க.த.க.பாடசாலை)

கட்டுவனைப் பிறப்பிடமாகவும் உடுவில் தெற்கு, யாமாச் சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பியப்பா தர்மலிங்கம் அவர்கள் (19.01.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (25.01.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி: சறோஜாதேவி,
மாமன்: இராசலிங்கம்.

*யாமாச் சந்தி,*
*உடுவில் தெற்கு,*
*மானிப்பாய்.* (27509)(21-13-16-30)

### சின்னையா மார்க்கண்டு

(பெயின்ரர் மார்க்)

நாயன்மார்கட்டைச் சேர்ந்த சின்னையா மார்க்கண்டு 21.01.2004 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் இந்திராதேவி, யோகாதேவி, காலஞ்சென்ற பாபுகுமார், சுரேஸ்குமார் (இந்தியா), நீனாதேவி (சுவிஸ்), ரூபாதேவி, தயாநிதிதேவி (சுவிஸ்), திவ்வியாதேவி (லண்டன்), சசிக்குமார் (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சண்முகம் மற்றும் சின்னத்துரை சரவணை ஆகியோரின் சகோதரரும் நாதன், செல்வச்சந்திரன், ரவி, கனகேஸ்வரி, தேவிகாராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இல.346, செம்மணி றோட், நாயன்மார்கட்டில் உள்ள அவரின் இல்லத்தில் இன்று (24.01.2004) சனிக்கிழமை 10.00 மணிக்கு (புதிய நேரம்) நடைபெற்று, பூதவுடல் நல்லூர் பரி.யாகோப்பு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

*இல.346, செம்மணி றோட்,*
*நாயன்மார்கட்டு,*
*யாழ்ப்பாணம்.*

(27513)(36-21-13-16)

# முடிந்தது கூட்டணித் தாவல்: தொடங்கியது தொகுதிப்பேரம்

இந்திய நாடாளுமன்றத் தேர்தலுக்கான கூட்டணித் தாவல்கள் தமிழகத்தில் முடிந்துவிட்டன. இதையடுத்து தொகுதிப் பங்கீட்டுப் பேரம் இடம் பெற்று வருகிறது.

தேர்தலுக்குப்பின், ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் கட்சித் தாவலுக்குத் தடைவந்த போதிலும், சில நேரங்களில் ஆட்சிக் கவிழ்ப்புகளுக்குக் காரணமாக அமையும் கூட்டணித் தாவலுக்கு இதுவரை தடையில்லை.

தேர்தலுக்குத் தேர்தல் கூட்டணி மாறுவது அரசியல் கட்சிகளின் வாடிக்கையாகிவிட்டது.

கடந்த தேர்தலில் காங்கிரஸுடன் கூட்டணி அமைத்த அ.தி.மு.க. இம்முறை பா.ஜ.கவுடன் கூட்டணி அமைக்கவுள்ளது.

தமிழக முதல்வரும் அ.தி.மு.க. பொதுச் செயலருமான ஜெயலலிதாவை எதிர்வரும் 28ஆம் திகதி பா.ஜ.க. தலைவர் வெங்கைய நாயுடு சந்தித்துப் பேசியபின் முறையான அறிவிப்பு வெளியாகும் என்று இரண்டு கட்சியினரும் உறுதி செய்கின்றனர்.

மேலும், அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணியில் தொகுதி உடன்பாட்டில் பெரும் சிக்கல் இருக்காது. கடந்த தேர்தலில் பா.ஜ.க. வெற்றி பெற்ற தொகுதிகளை மீண்டும் வழங்க வேண்டும். இதுதவிர எங்கள் கட்சிக்கு வெற்றி வாய்ப்புள்ள சில தொகுதிகள் சிலவற்றையும் அ.தி.மு.கவிடம் கேட்போம். ஆனால், தொகுதிப் பங்கீட்டில் பிரச்சினை ஏதும் ஏற்பட வாய்ப்பில்லை என்கின்றனர் பா.ஜ.கவினர்.

தி.மு.க. தலைமையிலான ஜனநாயக முற்போக்குக் கூட்டணி அரசியல் கட்சிகளின் 'மெகா' கூட்டணியாகக் காட்சி அளிக்கிறது. காங்கிரஸ், ம.தி.மு.க., பா.ம.க., இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் ஆகிய கட்சிகள் இக்கூட்டணிக்கான முதல் கட்டப் பணிகளை முடித்துள்ளன.

ஆனால், இக்கூட்டணியில் தொகுதிப் பங்கீடு எளிதில் முடிவடையும் என்று தெரியவில்லை.

எனவே, தொகுதிப் பங்கீடுபற்றி பேசுவதற்காகவே ஒவ்வொரு கட்சியும் தனித்தனிக் குழுக்களை அமைத்துள்ளன. பேச்சுவார்த்தையும் முதல் கட்டம், இரண்டாம் கட்டம் என்று தொடரும் நிலை உள்ளது.

தொகுதி ஒதுக்கீடு மட்டுமின்றி, எந்தத் தொகுதியை எந்தக்கட்சிக்கு ஒதுக்குவது என்பதிலும் பலத்த போட்டி ஏற்பட்டுள்ளது. இதனால், தொகுதிப்பேரம் முடிய மேலும் பல வாரங்கள் 'ஆகலாம்.

அதிலும், காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட விரும்புபவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருப்பதால், தொகுதி உடன்பாட்டைவிட அக்கட்சி வேட்பாளர் தேர்வுப் பிரச்சினை உச்சக் கட்டத்தை எட்டியுள்ளது.

1998ஆம் ஆண்டு அ.தி.மு.க., பா.ஜ.க, ம.தி.மு.க., பா.ம.க., ஜனதா கட்சி, ராஜீவ் காங்கிரஸ் ஒரு கூட்டணியிலும், தி.மு.க., த.மா.கா., இந்திய கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகள் மற்றோர் கூட்டணியிலும் போட்டியிட்டன.

அ.தி.மு.க. நின்றது 22, வென்றது 18, பெற்ற வாக்கு விகிதம் 25.89. பா.ஜ.க. நின்றது 5, வென்றது 3, வாக்கு விகிதம் 6.86. ப.ம.க. நின்றது 5, வென்றது 4, வாக்கு விகிதம் 6.04.

ம.தி.மு.க. நின்றது 5, வென்றது 3, வாக்குவிகிதம் 6.26. தி.மு.க. நின்றது 17, வென்றது 5, பெற்ற வாக்கு விகிதம் 20.08. த.மா.கா. நின்றது 20, வென்றது 3, வாக்குவிகிதம் 20.19. இந்திய கம்யூனிஸ்ட் நின்றது 2, வென்றது 1, வாக்குவிகிதம் 2.45.


1999 தேர்தலில் தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க., பா.ஜ.க., வாழப்பாடியின் ராஜிவ் காங்கிரஸ், ஆர்.எம்.வீரப்பனின் எம்ஜி.ஆர். கழகம், திருநாவுக்கரசுவின் எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. ஆகிய கட்சிகள் ஓரணியிலும், அ.தி.மு.க., காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றொரு அணியிலும், த.மா.கா., டாக்டர் கிருஷ்ணசாமியின் புதிய தமிழகம் ஆகியவை மூன்றாவது அணியிலும் போட்டியிட்டன.

இதில் தி.மு.க. கூட்டணி 26 தொகுதிகளில் வெற்றி பெற்று 47.13 சத வாக்குகளைப் பெற்றது. அ.தி.மு.க. கூட்டணி 13இடங்களில் வெற்றி பெற்று 41.57 சதவாக்குகள் பெற்றது.

எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. பின்னர் பா.ஜ.கவுடன் இணைந்துவிட்டது.

ஆனால், இந்த இரு தேர்தல்களின் போது அமைந்த கூட்டணிகளுக்கு முற்றிலும் மாறுபட்ட விதத்தில் தற்போது கூட்டணிகள் அமைந்துள்ளன.

அத்துடன், தமிழகத்தில் ஆளும் கட்சியான அ.தி.மு.கவும், மத்தியில் ஆளும் பாரதீய ஜனதாவும் ஓரணியில் நிற்கப்போகின்றன. தேர்தல்களில் மக்களுக்கு ஆளும் கட்சி மீதான அதிருப்தி எதிர்க்கட்சிகளுக்குச் சாதகமாக அமைவது வழக்கம். இப்போது மத்தியிலும், மாநிலத்திலும் ஆளும் கட்சிகள் இரண்டும் ஒன்று சேரும்போது மக்கள் அதிருப்தி அதிக பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என்று அவதானிகள் கருதுகின்றனர்.



திராவிடக் கலாசாரத்தின் படி வேஷ்டி அணிந்து வந்த தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி, காங்கிரஸ் கட்சியுடன் கூட்டு வைக்க முன்வந்ததன் பின்னர் வட இந்திய பாணியில் 'குர்தா' உடையையும் இடையிடையே அணிய ஆரம்பித்துள்ளார்.



தேர்தல் திகதி அறிவிக்கப்பட முன்னரே ஜெயலலிதாவின் 'கட் அவுட்டு'கள் தயாராகத் தொடங்கிவிட்டன.




நன்றி : தினமலர்

## பாண்டிச்சேரி தொகுதி யாருக்கு? காங்கிரஸ் - பா.ம.க. இழுபறி

இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.கவும், காங்கிரஸும் கூட்டணி அமைத்துப் போட்டியிடுகின்றன. பா.ம.க., ம.தி.மு.க., இடது கம்யூனிஸ்ட், வலது கம்யூனிஸ்ட், முஸ்லிம் லீக், தேசிய லீக் கட்சிகளும் இக்கூட்டணியில் இடம்பெற்றுள்ளன.

தி.மு.க. கூட்டணி கட்சிகள் இடையே தொகுதிப் பங்கீடு பேச்சு தீவிரமாக நடக்கிறது. கூட்டணி கட்சிகள் கேட்டும் பல தொகுதிகளை தி.மு.க. ஒதுக்கித்தர முன்வந்துள்ளது.

ஆனால், பாண்டிச்சேரி, வேலூர் தொகுதிகளை யாருக்குக் கொடுப்பது என்பதில் இழுபறி ஏற்பட்டு இருக்கிறது. கடந்த தேர்தலில் பாண்டிச்சேரியில் காங்கிரஸ் வெற்றிபெற்றது. இந்தக் கட்சி சார்பில் போட்டியிட்ட பரூக் மரைக்காயர் 1 லட்சத்து 65 ஆயிரத்து 108 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

அவருக்கு அடுத்தபடியாக பா.ம.க. சார்பில் போட்டியிட்ட எம்.ராமதாஸ் 1 லட்சத்து 40 ஆயிரத்து 920 வாக்குகளும், த.மா.கா. சார்பில் போட்டியிட்ட எம்.கண்ணன் 1 லட்சத்து 11 ஆயிரத்து 737 வாக்குகளும் பெற்றனர்.

வருகிற தேர்தலில் மீண்டும் இங்கு போட்டியிட காங்கிரஸ் விரும்புகிறது. ஏற்கனவே வெற்றிபெற்ற தொகுதி என்பதால் அதை விட்டுக்கொடுக்க காங்கிரஸ் மறுக்கிறது. ஆனால், பா.ம.க. தலைவர் டாக்டர் ராமதாஸ் பாண்டிச்சேரி தொகுதியை தனக்கு ஒதுக்குமாறு வற்புறுத்தி வருகிறார்.

இதுபோல் வேலூர் தொகுதியிலும் இழுபறி நிலவுகிறது.

வேலூரில் நடந்த தேர்தலில் பா.ம.க. சார்பில் போட்டியிட்ட என்.டி. சண்முகம், 3லட்சத்து 24 ஆயிரத்து 547 வாக்குகள் பெற்று வெற்றிபெற்றார். அவரை எதிர்த்து அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்ட முகமது ஆசிப் 2 லட்சத்து 98 ஆயிரத்து 832 வாக்குகளும் த.மா.கா. சார்பில் போட்டியிட்ட தமிழரசன் 44 ஆயிரத்து 551 வாக்குகளும் பெற்றனர்.

இந்தத் தொகுதியை மீண்டும் பா.ம.காவுக்கு தருமாறு ராமதாஸ் கேட்கிறார். ஆனால், தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ள முஸ்லிம் லீக் கட்சியும் வேலூர் தொகுதியை கேட்கிறது. தமிழக முஸ்லிம் லீக் தலைவர் காதர் மொய்தீன் இங்கு போட்டியிட விரும்புகிறார். எனவே, இந்த தொகுதியை யாருக்கு ஒதுக்குவது என்பதிலும் சிக்கல் நீடிக்கிறது.

## அ.தி.மு.க., பா.ஜ.க. இந்துத்துவக் கூட்டணி: கம்யூ. பொதுச்செயலாளர் ஏ.பி.பரதன் தாக்கு

அ.தி.மு.கவும் பா.ஜ.கவும் இந்துத்துவவாதிகள். இந்துத்துவக் கொள்கைகளைக் கொண்ட அவ்விரு கட்சிகளும் கூட்டுச் சேருவது இயல்பானது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளர் ஏ.பி.பரதன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

பெரியாரின் கொள்கைகளைக் கொண்ட திராவிடக் கட்சியான தி.மு.க., பா.ஜ.க. அணியில் நீண்ட காலத்திற்கு நீடிக்கமுடியாதென்று கூறிவந்தோம்.

கொள்கை அடிப்படையில் பா.ஜ.கவும் தி.மு.க.வும் ஒரே அணியில் நீடிக்கமுடியாது.

அந்த வகையில் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தி.மு.க. இடம் பெற்றிருந்தபோதிலும் இந்துத்துவ கொள்கைகளுக்கு உடன்படாததாக இருந்தது.

ஆனால் தேஜ. கூட்டணியில் அ.தி.மு.க. இடம்பெறாவிட்டாலும் அக்கூட்டணியில் இருந்தது போலவே செயற்பட்டுவந்தது.

99இல் தங்களது ஆட்சியைக் கவிழ்த்த ஜெயலலிதாவுடன் பாரதீய ஜனதாக கட்சியினர் கூட்டுச்சேருகின்றார்கள்.

## ராஜீவ் பாணியில் பிரியங்கா

உத்தரப்பிரதேச மாநிலத்தில் சோனியா போட்டியிடும் தொகுதியான அமேதியில் தேர்தல் பணிகளில் ஈடுபட்டுவரும் அவரது மகள் பிரியங்கா சாலையோரக் கடைகளில் தனக்கு கொண்டைஊசியும் தன்மகனுக்கு விசிலும் வாங்கி கடைக்காரர்களையும் மக்களையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினார். இது அவரது தந்தையான ராஜீவ்காந்தியின் பாணியாகும்.


அமேதித்தொகுதியில் தேர்தல் பணிக்கு இடையில் கடைத்தெருவுக்கு வந்தார் பிரியங்கா. ராமவத் என்பவரது கடைக்குள் நுழைந்தார். 'கொண்டை ஊசி கொடுங்கள்' என்று கேட்டார்.

அதனை எடுத்துக் கொடுத்த கடைக்காரருக்கு தன் கண்களையே நம்பமுடியவில்லை. 'விலை என்ன' என்று கேட்ட பிரியங்காவுக்கு பதில் கூறமுடியாத அளவுக்குத் திகைத்துப்போய் நின்றுகொண்டிருந்தார் அவர்.

வேண்டாம் வேண்டாம் என்று சொல்லிக்கொண்டிருந்த கடைக்காரரிடம் ஐம்பது ரூபாய் நோட்டைக் கொடுத்தார் பிரியங்கா.

# காங்கிரஸ் அதிரடித் திட்டம்: ராகுல் - பிரியங்கா களத்தில்!





இந்தியாவில் சமீபத்தில் இடம் பெற்ற மாநில சட்டசபை தேர்தல்களில் படுதோல்வியை சந்தித்த காங்கிரஸ் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றியே தீர வேண்டும் என்ற முனைப்புடன் களத்தில் இறங்கியுள்ளது. காங்கிரஸ் தலைவர் சோனியா, ஏற்கனவே தேர்தல் பிரசாரத்தை தொடங்கிவிட்டார்.

இதற்கிடையே பாரதீய ஜனதா தலைவர்களின் புயல்வேகப் பிரசாரத்துக்கு தக்க பதிலடி கொடுக்க வேண்டுமானால் ராஜீவின் மகள் பிரியங்கா பிரசாரம் செய்ய வரவேண்டும் என்று மாநிலக் காங்கிரஸ் தலைவாகள வலியுறுத்தினார்கள். 'சோனியா வெளிநாட்டுப் பெண்' என்ற கோஷத்தை முறியடிக்க பிரியங்காவால்தான் முடியும் என்று மூத்த காங்கிரஸ் தலைவர்களும் கருத்து தெரிவித்தனர்.

இதை ஏற்றுக்கொண்ட சோனியா, தேர்தல் பிரசாரத்துக்கு ராகுல், பிரியங்கா இருவரையும் களத்தில் இறக்க அதிரடி முடிவு எடுத்தார். அதன் முதல் கட்டமாக ராகுல், பிரியங்கா இருவரும் அமேதி தொகுதிக்கு சென்று தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

அமேதி தொகுதியின் சந்து பொந்தெல்லாம் ஏற்கனவே போய் இருக்கும் பிரியங்கா, இந்தத் தடவை முக்கிய நிர்வாகிகளை அழைத்து ராகுல் காந்தியை அறிமுகஞ் செய்தார். பிறகு ராகுலுடன் அவர் குக்கிராமங்களுக்கு சென்று மக்களுடன் பேசினார்.

ராகுல் - பிரியங்கா இருவருக்கும் அமேதி தொகுதி மக்கள் வழக்கம் போல் அமோக ஆதரவு தெரிவித்தனர். மகனுக்கு விசில் வாங்கியது, இனிப்பு கடைக்குச் சென்று ஜிலேபி வாங்கியது போன்ற நடவடிக்கைகளால் பிரியங்காவின் செல்வாக்கு அங்கு உயர்ந்துள்ளது.

இந்த நிலையில் பிரியங்கா, ராகுல் இருவரும் தேர்தலில் போட்டியிட முடிவுசெய்து இருப்பதாகத் தெரிய வந்துள்ளது. ராகுல்காந்தி உத்தரபிரதேசத்தில் உள்ள அமேதி அல்லது ரேபரேலி தொகுதியில் நிறுத்தப்படக் கூடும் என்று கூறப்படுகிறது.

சோனியா அமேதி தொகுதியில் நின்றால் ராகுல் ரேபரேலிக்கு மாற்றப்படுவார் என்று பேசப்படுகிறது. பிரியங்கா எங்கு நிறுத்தப்பட்டாலும் ஜெயிப்பார் என்ற கருத்து நிலவுகின்றது.

எனவே, பிரியங்கா ஆந்திரா அல்லது கர்நாடக மாநிலத்தில் உள்ள காங்கிரஸுக்கு வலுவான தொகுதியில் நிறுத்தப்படலாம் என்று காங்கிரஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

திண்டுக்கல் இரும்புப்பெட்டி, காஸ் குக்கர், உஷா தையல்மெசின விற்பனைக்குண்டு. ஞாயிற்றுக்கிழமைகளில் பார்வையிடலாம். 34/3, உடையார் லேன், பழம் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (27479)

கோண்டாவில் சந்தியில் 4 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. கடை கட்டுவதற்கும் உகந்தது. பிரித்தும் கொடுக்கப்படும். தொடர்பு:- ராஜ், 077 6035415. (27519)

50ருீ தொடரிலக்கமுடைய Toyota Hiace (LH 30) சகல ஆவணங்களுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சுந்தரலிங்கம் விதானையார், ஆடுபாவத்தை, வதிரி, கரவெட்டி (வதிரிச சந்திக்கு அருகில்). ஞாயிற்றுக்கிழமை மட்டும் பார்வையிடலாம். T.P.: 0777 589608. (27532)

31ஸ்ரீ தொடரிலக்கமுடைய சொந்தப பாவனையிலுள்ள Morries Oxford (டீசல்) கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: S.Fabian, 303, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 0712-512866. (27518)

### வீடு விற்பனைக்கு

புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறையில் 3 பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் கூடிய மேல்மாடி வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 27/17, புங்கன்குளம் வீதி, கொழும்புத் துறை. T.P.: 0777570279, 0777305533. (C/32826)

திருநெல்வேலி, பலாலி வீதியில் இரண்டரை (2½) பரப்புக் காணியில் ஆறு அறைகொண்ட நாலுசார் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: துரைசிங்கம். 0712-234990, 0112-586549. (27469)

### மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள, (யாழ்ப்பாணத்தில் அரிதாகக் காணப்படும்) யப்பான் Honda - Custom 100 (Ladies) மோட்டார் சைக்கிள் தனிப் பாவிப்பிலுள்ளது விற்பனைக்குண்டு. தொடர்பு: ஜெயகாந்தன். 077-600 5384. (27517)

### நாய்க்குட்டி விற்பனைக்குண்டு

நல்ல சுத்தமான Dobermann Pincher மற்றும் Great Dane நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (27473)

### இறைச்சிக்கோழி விற்பனை

Prima, Broiler இறைச்சிக்கோழிகள் சுகாதாரமுறைப்படி உடன்சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம (Electronic நிறுவை), (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச சந்தையடி, நல்லூர். (27471)

### கோழிக்குஞ்சு விற்பனை

வளர்ந்த Prima பேட்டுக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (27474)

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima, Broiler குஞ்சுகள விலை 44/=, அதிவிசேட Prima பேட்டுக்குஞ்சுகள் விலை 65/=, 02.02.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். எம்மிடமும் பருத்தித்துறைக்கிளையிலும் பெற்றுக கொள்ளும் Prima குஞ்சுகளுக்கு Prima கம்பனியால் உத்தரவாதம் வழங்கப்படும் (நல்லூர் வீடியோ சென்ரா வளவு),19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (27472)

### இசைக் குறிப்புகள்

ஓகன், கிற்றார், வயலின்,வீணை முதலான இசைக் கருவிகளுக்கான சினிமாப் பாடல்களின் இசைக் குறிப்புகள் விற்பனைக்கு வந்துள்ளன. பாகம் 21 வரை வெளிவந்துள்ளன. தொடர்பு: S.S.றஜீந்திரன், 75, கோவில் வீதி, நல்லூர். T.P.: 0777 031293. (27522)

### CAMERA

Canon EOS 500 Camera, made in Japan விற்பனைக்குண்டு. Automatic and Manual with 80mm Extra Zoom lens. தொடர்பு: S.S.றஜீந்திரன், 75, கோவில் வீதி, நல்லூர். T.P.:0777 031293 (நல்லூர் கந்தசுவாமி கோயிலிருந்து 500m தெற்கே). (27523)

### தவறிவிட்டது

உயரப்புலம், ஆனைக்கோட்டை வீதியில் (21.01.2004) புதன்கிழமை 2பவுண் நிறையுடைய தங்கச் சங்கிலி ஒன்று தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் M.ஞானசேகரன், பிடாரி அம்மன் கோயிலடி, ஆனைக்கோட்டை எனும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும் (சன்மானம் வழங்கப்படும்). (27495)

### காணவில்லை

இல.226, கோவில் வீதி, யாழ்ப்பாணத்தில் 3 வயது நிரம்பிய Dark Brown நிறமுடைய பொமேரியன் நாய்க்குட்டியை 15.01.2004 வியாழன முதல் காணவில்லை. கண்டவர்கள் மேல் உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (27538)

## அத்தியடியில் கலந்துரையாடல்

கொழும்புத்துறை,ஜன.24

யாழ்.நல்லூர் கோட்ட அரசியற் துறையினரின் ஏற்பாட்டில் அத்தியடி கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பொதுமக்களுடனான விசேட கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

நாளை மாலை 3 மணிக்கு யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள ஆயுர்வேதக் கல்லூரியில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் ஜே-78 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மக்களைக் கலந்துகொள்ளுமாறு கேட கப்பட்டுள்ளது. (ஒ-30)

## மாணவருக்கு காலணிகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.24

சுதுமலை சின்மயபாரதி வித்தியாலயத்தில் கல்விபயிலும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட 52 மாணவர்களுக்கு இலவசமாகக் காலணிகள் வழங்கப்பட்டன.

தியாகி அறக்கொடை நிலையத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்ட இந்தக் காலணிகள் நேற்றுப் பாடசாலையில் வைத்து மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் தியாகி அறக்கொடை நிறுவனத்தைச் சேர்ந்த திருமதி ஸ்ரீதேவி ஞானரட்ணம், என்.நேசநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஒ-9)

## மரண அறிவித்தல்

### செல்வி செபஸ்தி ஞானம்மா

யாழ்ப்பாணம், மத்தியூஸ் வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வி செபஸ்தி ஞானம்மா 21.01.2004 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்தி - மேரிப்பிள்ளை தம்பதியரின மூத்த மகளும் ஆனாச்சி பாக்கியம், மரியம்மா, ஆசீர்வாதம், மரியதாசன் (முன்னாள் தபால் அதிபர்), காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை, மேரி மாகிறேட் (மலர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை யோசேப், வெலிச்சோர், செபமாலையம்மா, புளோறா (பேபி) ஆகியோரின் அருமை மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24.01.2004) சனிக்கிழமை மாலை 3 மணிக்கு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.ஆசீர்வாதம (சகோதரன்).

*21, மத்தியூஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (27529)(34-21-19-12)


செல்வம் செழிக்கக்கூடிய வளமான விளைச்சலுக்கு இலங்கையில் முன்னணியில் திகழும்

எட்க்ரோ

கிரீவ்ஸ்

MK 12/MK 25



விவசாய நீர் இறைக்கும் இயந்திரம்

புத்திசாலியான உங்கள் சரியான தெரிவு, எட்க்ரோ நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் பொங்கி வரக்கூடிய சலுகைகள்.

ஒரு வருடத்துக்கான உத்தரவாத சான்றிதழ்.
பலமிக்கதும் நீண்ட காலம் உழைக்கக்கூடியதும்.
அதிக தண்ணீரை பெற்றுக்கொள்ளக்கூடிய வல்லமை.
சுயமாகவும் சுயமற்றதாகவும் நீர் இறைக்க வல்லது.
எரிபொருளை சேமிக்க வல்லது.

நாடளாவிய விற்பனைக்கு பிந்திய சிறந்தசேவை. தேவையானளவு உதிரிப்பாகங்கள்.

EDNA GROUP

எட்னா அப்ளயன்ஸஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
160, பௌத்தாலோக மாவத்தை கொழும்பு-04.
தொலைபேசி: 508961-2, 502291-3, 592135-6 தொலைநகல்: 594558, 500909.
தொடர்புகளுக்கு: மயூரா 0777 - 418821 கிழனு 0777 - 418817

யாழ்ப்பாணத்தில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள:
ஆர்க் என்ரபிறைசஸ்
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-222 2052.


(27244) (21-34-12-19)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

அமரர்

### அருட்பிரகாசம் பாஸ்கரன்

(நீர்வேலி, ப.நோ.கூ.சங்க முன்னாள் கிளை முகாமையாளர்)



தோற்றம் 15-10-1954 | மறைவு 26-12-2003

*அன்புடனும் பண்புடனும் அகிலத்தில் வாழ்ந்திருந்தீர்!*
*இன்றுடனே முப்பத்தொரு நாளுமாயிற்றோ நீர் எமைப்பிரிந்து!*
எப்போதும் உமது திருமுகந்தான் எம் கண்முன்னே தெரிகிறதே.
ஆத்மா சாந்தி அடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (25-01-2004) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன், நண்பகல் நிகழவிருக்கும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
அன்புத் தந்தை, அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

கரந்தன் மேற்கு,
நீர்வேலி.

(27533)(21-19-12)

## தொலைத் தொடர்பு நிலையத்தில் கொள்ளை

யாழ்ப்பாணம் - இல.448, காங்கேசன்துறை வீதியில் யா/இந்துக்கல்லூரிக்கு அணித்தாகவுள்ள -
"சிவா தொலைத்தொடர்பு நிலையம்"
நேற்றிரவு சூறையாடப்பட்டது.

நள்ளிரவு நேரத்தில் கதவுப்பூட்டு உடைக்கப்பட்டு மிகவும் பெறுமதிவாய்ந்த பொருள்கள் திருடப்பட்டுள்ளன. மேற்படி கொள்ளையிடப்பட்ட பொருள்களைப் பற்றிய சரியான தகவல் தருபவா களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

- உரிமையாளர்

448, கே.கே.எஸ்.வீதி, சிவா தொலைத்தொடர்பு நிலையம்
யாழ்ப்பாணம். (27558)(11-18-36) 0776181163

## இன்று இன்னிசை கானங்கள்

இளவாலை யங் கென்றீசியன் விளையாட்டுக்கழக வளர்ச்சி நிதிக்காக
ஜேம்ஸ் அன்ரனின்
FRIENDS இசைக்குழுவினருடன் ஈழத்துப்பாடகர்
சுகுமார் இணைந்து வழங்கும்

### இன்னிசை கானங்கள்

இடம்: இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி மைதானம்
நாள்: இன்று (24.01.2004) சனிக்கிழமை மாலை 6.30 மணி.
**நுழைவுக்கட்டணம்**: 20/= ,50/=, 100/=.

(27554)(11-18-36)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 10 . 07 . 1933



இறப்பு 26 . 12 . 2003

நவிண்டிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும்
இ.போ.ச.முன்னாள் சாரதியும் 'திரு' என அன்பாக
அழைக்கப்படுபவருமாகிய

### அமரர் முருகேசு திருநாவுக்கரசு அவர்கள்

மாந்தருள் மாணிக்கமாய் மாண்புடன் திகழ்ந்தீர்
அன்புக்கும் பாசத்துக்கும் அணிகலனாய் விளங்கினீர்
நீங்கள் மறைந்தாலும் நினைவுகள் மறையவே மறையாது.
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகிறோம்.

இன்று (24.01.2004) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்விலும் மதிய போசனத்திலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*தகவல்: தி.மனோகரன்*
*(இலங்கை மின்சார சபை)*
*'மிதிலை', கரணவாய் வடக்கு,*
*கரவெட்டி.* (27550)(36-11-18)
-மக்கள், மருமக்கள்.

## 29 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு 11 - 02. - 1923



இறப்பு 28 - 12 - 2003

### அமரர் விசுவர் மயில்வாகனம்

(விவசாய மன்னர் - கப்பல்)

மனிதருள் மாணிக்கமாய் அன்பின் உருவாய் திகழ்ந்தீர்
பண்பின் உருவாய் ஒழுக்கசீலராய் வாழ்ந்திரே
உழைப்பால் உயர்ந்த உத்தமரே
எங்கள் அன்புத் தெய்வத்தின் இன்முகத்தை எங்கே காண்போம்
உங்கள் ஆத்மசாந்திக்காய் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நாளை (25.01.2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில நடைபெறும் அமரரின் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை ஒரு தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

எங்கள் குலத்தலைவரின் மரணச்செய்திகேட்டு துயரத்திலும் இறுதிச் சடங்கிலும் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கும்பளாவளை மேற்கு,
அளவெட்டி.
(27560)(11-18-36)

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
தகவல்: ம.பத்மநாதன்
'சேது களஞ்சியம்' யாழ்ப்பாணம்.

## படிவம்

ஆசிரியர் சேவை 3 - II இற்கு கவின் கலை, உடற்கல்வி, விவசாயம், மனையியல் பாடத்திற்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் உண்டு.
முடிவுதிகதி:- 31.01.2004
BHARATHI PATHIPPAKAM
OFFSET & LETTER PRESS
PRINTERS,
430,K.K.S. ROAD, JAFFNA.
(சி-32908)

TOGETHER WE CAN ROTARACT CLUB MAKE IT HAPPEN
Lend a Hand

நல்லூர் றோட்டறக்கழகத்தின்
மூன்றாவது ஆண்டு நிறைவு விழாவும்
இன்ரறொட்டா கலை நிகழ்ச்சியும்

காலம்:- இன்று (24.01.2004) சனிக்கிழமை
நேரம்:- காலை 9.30 - 3.30 வரை (பு.நே.)
இடம்:- வழமையான ஒன்றுகூடல் மண்டபம்

அனைத்து றோட்டறி, றோட்டறக், இன்ரறக்ட் கழக உறுப்பினர்களை கலந்துசிறப்பிக்குமாறு கேட்டுக கொள்கிறோம்.
செயற்றிட்ட இயக்குநர்,
நல்லூர் றோட்டறக்கழகம். (சி-32907)

## CAKE ICING

Cake Icing வகுப்புகள் 30-01-2004 இல் ஆரம்பமாகின்றன.
முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளவும்.
சகல விதமான ஐசிங் கேக் வகைகளும் ஓடருக்குச் செய்து கொடுக்கப்படும.
தொடர்பு: சி.சிவநேசன்,
புத்தூர் றோட். மீசாலை வடக்கு. மீசாலை.
(27568)(36)

**தரம் 5 புலமைப்பரிசில்- 2004 சுந்தர் வெளியீடு**

எமது நிறுவனத்தில் ஞாயிறு தோறும் மேற்படி நிறுவனப்பரீட்சை நடைபெறும்.
பரீட்சை 4 இல் பரிசுக்குரிய மாணவர்கள்

★ ப.சதீஸ்குமார் - 181
★ வெ.ஹரிகரன் - 178
★ இ.வினு - 161

(யா/இந்து ஆ. பாடசாலை மாணவர்கள)
அடுத்த பரீட்சை 25.01.2004 (ஞாயிறு) இரு நேரங்களில் - காலை 9.00 - 10.30
தரம் 1 முதல் O/L வரை புலமைப்பரிசில் வகுப்பு நடைபெறுகின்றன. (27566)(36)

## நாவலர்

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**லக்ஷ்மி இணுவில்**

அஜித், கார்த்திக், ரோஜா நடித்த
உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன் (சீன்ஸ்)
காட்சிநேரம் :10.30,2.30, 6.30.(பு.நே)
(சி-32369) (32)

**ராஜா யாழ்ப்பாணம்**


பிரசாந்த் நடித்த
(சீன்ஸ்)
காட்சி நேரம்
10.30, 2.30, 6.30,9.30 (பு.நே.)
(சி-32369) (32)

**நிறைஞ்சனாஸ்**

அர்ஜுன், சிம்ரன் நடித்த
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
Can You Do A Lote Come
(C-32370) (32)

**நாகம்ஸ் சுன்னாகம்**

கமல், அபிராமி, நெப்போலியன், நாசர் நடித்த
E.A.P.இன் பொங்கல் வெளியீடு



(சண்டியர்) (சீன்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
(சி-32739)(31)

**லிபேட்டி அச்சுவேலி**

இன்றுமுதல்
ராஜ்கிரன், மீராகிருஷ்ணா, விஜயகுமார் நடித்த
கொஞ்சிப்பேசலாமா (சீன்ஸ்)
சினிமாஸ் லிமிட்டட் வெளியீடு
தினசரி காட்சி: 3.00, 7.00.
(C-32863) (32)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கப் பணியாளர்
கை.சிவநாதன அவர்களின் அன்பு மனைவி
**திருமதி சுமதி சிவநாதன்** அவர்கள் காலமான செய்திகேட்டு நாம் துயரமடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர், பணியாளர்கள்,
(சி-32905)(36-11-18) ஊர்.ப.நோ.கூ.சங்கம், ஊர்காவற்றுறை.

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் கிராம உத்தியோகத்தராக கடமையாற்றும
திரு.சி.பாலசுந்தரம அவர்களின் அன்பு மாமியார்
**திருமதி இராமசிப்பிள்ளை செல்லையா**
அவர்கள்
22.01.2004 இல் காலமானதையிட்டு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்
பச்சிலைப்பள்ளி ,
பளை. (27565)(36-11-18)
பிரதேச செயலரும்,
உத்தியோகத்தர்களும்.

# மரண அறிவித்தல்கள்

## வல்லிபுரம் கனகரட்ணம்

கந்த உடையார் ஒழுங்கை, புலோலி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் 24/4, பிரான்சிஸ் றோட், வெள்ளவத்தையை வசிபிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கனகரட்ணம் அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னார் **Ceylon IMPORTS and EXPORTS LTD** முன்னாள் **Director** உம காலஞ்சென்ற சட்டத்தரணி வல்லிபுரம் - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற P.W.D ஓவசியர் சிவகுருநாதன் - மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் இலக்குமிதேவியின் அன்புக் கணவரும் ரேணுகா (கனடா), சிவகாமி(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கேதீஸ்பரனின் (கனடா) அன்புக் மாமனாரும் தம்பையாவின் (இலங்கை வங்கி முன்னாள் உத்தியோகத்தர்) அன்புத் தம்பியும் காலஞ்சென்ற வ.ராமச்சந்திர னின் (ராமுதோட்டம், அளம்பில்) அன்புத் தமையனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24.01.2004) சனிக்கிழமை காலை 10 மணியளவில் கனத்தை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுச் கொள்ளவும்.

*213/c, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (27563)(36-11-18)
தகவல்:P.தவராஜ்.
*P.T.R. TRADES,JAFFNA.*

## இராமலிங்கம் கதிர்காமநாதன்

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், கொண்ட இராமலிங்கம் கதிர்காமநாதன் அவர்கள் நேற்று(23.01.2004) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கனகாமபிகையின் அன்புக் கணவரும் சுந்தரகுமாரின் அன்புத தந்தையும் பாலசுப்பிரமணியத்தின்(கனடா) சகோதரரும் ஆவார்.

அன்னரின் இறுதிக்கிரியைகள் இன்று(24.01.2004) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு பி.ப.1.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுதுமலை வடக்கு மானிப்பாய்.* தகவல்: மனைவி, மகன்.
(27561)(36-11-18)

## பரராஜசிங்கம் திருநாவுக்கரசு

(இலங்கை வங்கி, பாதுகாப்பு உத்தியோகத்தர்)

சந்தை வீதி, ஆவரங்காலைச் சேர்ந்த பரராஜசிங்கம் திருநாவுக்கரசு நேற்று (23-01-2004) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பரராஜசிங்கம (நீதிமன்ற சுருக்கெழுத்தாளர்) மற்றும நாகம்மாவின் அன்பு மகனும் கதிரவேலு (ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்) மற்றும் காலஞ்சென்ற சிவக்கொழுந்துவின் மருமகனும தவறஞ்சினியின் அன்புக கணவரும் கபில்தரன்( யா/ மத்திய கல்லூரி A/L மாணவன்), கவாஸ்கரன், உஷா, துசாந்தினி(நடராஜா இராமலிங்க வித்தியாலயம்), தக்ஷாயினி( உடுவில் மகளிர் கல்லூரி), திலோஜினி (நடராஜா இராமலிங்க வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் தியாகராஜா, யோகேஸ்வரி, இராஜேஸ்வரி, தங்கராஜா(ஜேர்மனி), தருமராசா(ஜேர்மனி) ஆகியோரின் அன்புச சகோதரரும் தியாகராஜா பத்மாவதி (உதவி அரசாங்க அதிபர், துணுக்காய்), சண்முகநாதன், கனகசபை, தவராஜா(சுவிஸ்), காலஞ்சென்ற சத்தியேந்திரா, சத்தியசீலன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.01.2004) ஞாயிற்றுக்கிழமை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரதடி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆவரங்கால் மேற்கு, ஆவரங்கால்.* தகவல்:குடும்பத்தினர்.
(27564)(36-11-18)

## பொன்னம்பலம் விநாயகமூர்த்தி

(முன்னாள் கௌரவ செயலாளர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், கிளிநொச்சி)

பூநகரியைப் பிறப்பிடமாகவும் பரவிப்பாஞ்சான் , கிளிநொச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் விநாயகமூர்த்தி 22.01.2004 அன்று காலமானார்.

அன்னார் பொன்னம்பலம் - செல்லம்மாவின் அன்பு மகனும் தையல்நாயகியின அன்புக் கணவரும் சுந்தையா - இராசம்மாவின் அன்பு மருமகனும் குமுதினி, சந்துரு, திவ்வியா ஆகியோரின் அன்புத் தந்தையும் பவாவின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற தர்மலிங்கம், ஞானசேகரம்பிள்ளை(கனடா), பாலச்சந்திரன் (கிராமசேவையாளர், பூநகரி), சீதாலட்சுமி(பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரரும் பாலாம்பிகை, சிவஞானம், சோமசுந்தரம், கல்யாணசுந்தரம் இந்திராணி, காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, பாலசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 26.01.2004 திங்கட்கிழமை கிளிநொச்சியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கிளிநொச்சி.* (27567)(36-11-18) தகவல்:திருமதி வி.தையல்நாயகி(மனைவி).
(ஆசிரியர் கிளி.மகாவித்தியாலயம்)

## சுந்தரலிங்கம் வினோதன் (காரைநகர்)

பயிரிக்கூடல், காரைநகரைச் சேர்ந்த சுந்தரலிங்கம் வினோதன் அகால மரணமாகிவிட்டார்.

அன்னார் சுந்தரலிங்கம் - கமலாதேவியின் கனிஷ்ட புத்திரனும் சுதாகரனின் தம்பியும் சத்திரந்தையைச் சேர்ந்த சுப்பிரமணியத்தின் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2004) சனிக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்தஅறிவித்தலை உற்றர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*62/3, வெயிலுகந்த பிள்ளையார் கோயிலடி,*
*செம்மணி வீதி, நாயன்மார்கட்டு.* (27569)(36-11-18)
தகவல்:
சு.சுந்தரலிங்கம(தந்தை)

# இனவாதம் பேசுவோரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வலியுறுத்தி வருகின்றோம்.

இனவாதம் பேசிக்கொண்டு, இனவாதத்தையே சிந்தனையாகக் கொண்டு, தமிழ் மக்களுக்கு எந்தவிதத் தீர்வையும் முன்வைக்க முடியாத அரசியல் தலைமைகளை சிங்கள மக்கள் தெரிவுசெய்வார்களேயானால், இருதரப்புக்கும் இடையில் இணக்கப்பாடுகளை ஏற்படுத்த முடியாது போகும். அப்போது தமிழ் மக்கள் தங்கள் தலைவிதியைத் தாங்களே தீர்மானிக்கும் போக்கைத்தான் கடைப்பிடிக்கவேண்டிய நிலைக்கு இலங்கை அரசியல் தள்ளிவிடும் எனக் கருதுகிறேன்.

★கேள்வி: புதிய கூட்டணி குறித்து சிங்கள மக்களுக்கு எந்தச் செய்தியை விடுக்க விரும்புகிறீர்கள்?

★பதில்: கடந்த தேர்தலில் சிங்கள மக்கள் தெளிவாகத் தமது நிலைப்பாட்டை - ஆணையை - வரலாற்று முக்கியமான முடிவை -வெளியிட்டிருந்தனர். சமாதான வழியில், அமைதி வழியில் விடுதலைப் புலிகளுடன் பேசி இணக்கமான தீர்வு ஒன்றைக் கொண்டுவரவேண்டும் என்று சிங்கள மக்கள் விரும்பினர்; பெரும்பான்மையான மக்கள் இந்தக் கருத்தையே வெளியிட்டிருந்தனர்.

அதேபோன்று, இலங்கைத்தீவை அழிவிலிருந்து காப்பாற்ற, நெருக்கடிகளில் இருந்து மீட்க, சகல மக்களும் சந்தோஷமாக வாழக்கூடிய நிலையை உருவாக்க எதிர்வரும் தேர்தலை சிங்கள மக்கள் பயன்படுத்த வேண்டும்.

இனவாதம் பேசுபவர்களை நிராகரித்து, மீண்டும் இலங்கைத் தீவில் அழிவு ஏற்படுவதைத் தடுக்கவேண்டிய பொறுப்பு சிங்கள மக்களின் கைகளில்தான் இருக்கின்றது. இதைச் சிங்கள மக்கள் நிச்சயமாகச் செய்வார்கள் என நம்புகின்றேன்.

★கேள்வி: விடுதலைப் புலிகளை ஏக பிரதிநிதிகளாக ஐ.தே.முன்னணி ஏற்கவில்லை. அதேபோன்று நாமும் விடுதலைப் புலிகளை ஏக பிரதிநிதிகளாக ஏற்காமல் எல்லாக் கட்சிகளுடனும் பேசுவோம் என்று லக்ஷ்மன் கதிர்காமர் கூறியிருக்கின்றார். அது குறித்து...?

★பதில்: கதிர்காமருக்கு ஏன் இப்படி ஒரு குழப்பம் வந்ததோ தெரியவில்லை. கடந்த இரண்டு வருடங்களாக தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளை ஏற்றுக்கொண்டுதான் அரசு எம்மோடு 6 சுற்றுப் பேச்சுக்களை நடத்தியது; பல்வேறுபட்ட கலந்துரையாடல்களை நடத்தியது. யுத்தநிறுத்த உடன்பாட்டைக்கூட எம்முடன் செய்துள்ளது. எம்மைத் தமிழரின் பிரதிநிதியாக ஏற்காமல் அரசு இவ்வளவற்றையும் செய்திருக்கமாட்டாது. சமாதான முயற்சியில் பல விடயங்கள் விடுதலைப் புலிகளுடன் மட்டுமே நடைபெற்றுள்ளன. இவை கதிர்காமருக்குத் தெரியாது இருப்பது வேடிக்கைதான்.

★கேள்வி: கடந்தகாலங்களில் நடந்த பயங்கரவாத நடவடிக்கைகளுக்காக விடுதலைப் புலிகளின் தலைவரை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தப்படவேண்டும் என்று ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ கூறுகின்றார். அது பற்றி...?

★பதில்: சர்வதேச நீதிமன்றத்தில் உடனடியாக ஆஜர்செய்யப்படவேண்டியவர் சோமவன்ஸதான். அடுத்ததாக சந்திரிகா அம்மையார் போகவேண்டும்.

கடந்த காலத்தில் ஒரு லட்சம் தமிழ் மக்களை இழந்துள்ளோம் சொந்த வீடுகளில் இருந்து விரட்டப்பட்டுள்ளோம் இன அழிப்பு கொடூரமாக இடம்பெற்றுள்ளது. இந்தளவுக்குக் காரணமான, அரச பயங்கரவாதத்தை ஏவிவிட்ட தலைவர்கள் அங்கே இருக்கிறார்கள்.

எமது உரிமைக்காக, சுதந்திரத்துக்காக தமிழர் தலைநிமிர்ந்து வாழக்கூடிய நிலையை உருவாக்கிய தலைவரைப்பற்றி குறிப்பிட அவருக்கு எந்தத் தகுதியும் இல்லை. அவர்கள்தான் முதலில் சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தப்படவேண்டியவர்கள். தாங்கள் செய்த குற்றங்களை மறைக்க இப்படியான கற்பனைகளை வெளியிடுவது நடைமுறைச் சாத்தியமற்ற விடயமாகும்.

★கேள்வி: கூட்டமைப்பில் இடம்பெறாத ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) ஆகிய கட்சிகளுடன் தேர்தல் தொடர்பாகப் பேசுவீர்களா?

★பதில்: தமிழர் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி, கேவலப்படுத்தி வருகிறவர் ஈ.பி.டி.பி. டக்ளஸ் தேவானந்தா. தமிழ் மக்கள் பட்ட அவலங்கள் மாறி சாதாரண சூழ்நிலை ஏற்படக்கூடிய வாய்ப்பைக்கூட சீகுலைக்கின்றவர் அவர். சு.க. - ஜே.வி.பி. கூட்டு முன்னணியைப் பாராட்டி, வரவேற்று செய்திகளை வெளியிட்டுக்கொண்டிருப்பவர். இவரிடம் தமிழ் மக்களின் மறுவாழ்வுக்கு உதவ வாருங்கள் என்று கேட்பது எந்தளவுக்கு நியாயம்.

போர்க்காலத்தில் உயர்ந்த நீங்கள், நாங்கள் எல்லோரும் மதிப்பு வைத்திருந்த - பத்திரிகையாளனை, மனித உரிமை மீறல்கள் இடம்பெற்ற கட்டத்தில் துணிந்து செயற்பட்ட பத்திரிகையாளனை அழித்தவர்கள் அவர்கள்.

எங்கள் மக்களுக்குப் பெரும் அழிவைக் கொடுக்கின்ற, சீகுலைக்கின்ற நோக்கம் கொண்ட கொள்கைகளைப் பிரகடனப்படுத்திக்கொண்டு வரும் கூட்டு முன்னணியை முதல் வரவேற்றவர்களில் தமிழர்கள் என்று சொல்லப்படுகின்ற இவர்களும் அடங்குகின்றனர்.

இவர்களுடன் கூட்டுச்சேர எமது மக்கள் எம்மை அனுமதிப்பார்களா என்பது முதலாவது சந்தேகம். அப்படியானவர்களுடன் கூட்டுவைப்பது என்பது நடைமுறைச்சாத்தியமற்றது. மக்களே அவர்களை நிராகரிப்பார்கள்.

- இப்படி தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

# மட்டுவிலில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வானில் யாழ்ப்பாணத்துக்குப் புறப்பட்டிருப்பது தெரியவந்திருக்கிறது. கணனிகள் சிலவற்றை யாழ்ப்பாணத்துக்கு ஏற்றிச்செல்வதற்காக அவரது வானை சிலர் வாடகைக்கு அமர்த்தியிருந்தனர் என்பதும் -

சுமார் பத்து கணனிகளுடன் அவ்வானில் யாழ்ப்பாணத்துக்குப் பயணமானார் என்றும் -

உறவினர்களுக்குத் தெரியவந்திருக்கிறது.

அவருடன் கூடவே வானில் மற்றொரு நபரும் பயணம் செய்தார் என்றும் -

அவர் யார் என்பது தெரியவில்லை எனவும் -

இங்குள்ள உறவினர்கள் கூறுகின்றனர்.

கொலைசெய்யப்பட்ட பிரஸ்தாப இளைஞன் செலுத்திவந்த வான் காணமற்போயிருக்கிறது.

அவர் தனது வானில் எடுத்துவந்தார் எனக் கூறப்படும் கணனிகள் எங்கே என்பதும் தெரியவில்லை என்று கூறப்படுகிறது.

சாரதியைக் கொன்றுவிட்டு கணனிகளுடன் வான் கடத்திச்செல்லப்பட்டிருக்கலாம் என்று பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரிப் பொலீஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

வானும் அதன் சாரதியான பிரஸ்தாப இளைஞனும் முகமாலையிலுள்ள இராணுவ சோதனைச் சாரதியைக் கடந்து வந்ததற்கான பதிவுகள் தெரியவந்திருப்பதாகப் பொலீஸ் வட்டாரங்கள் கூறுகின்றன.

கொழும்பிலிருந்து புறப்பட்ட தமது மகன் ஒருவாரத்துக்கும் கூடிய காலமாக வீட்டுக்கு வந்துசேராததையடுதது அவரது பெற்றோர்கள் கடந்தசில தினங்களாக அவரைத் தேடித் திரிந்திருக்கின்றனர்.

முகமாலை, பளை, கொழும்பு ஆகிய இடங்களுக்குச் சென்று விசாரித்தும் தகவல் எதுவும் கிடைக்காததால் அதிர்ச்சியடைந்த அவர்கள், பின்னர் யாழ்.ஆஸ்பத்திரியில் இனங்காண்பதற்காக சடலம் ஒன்று வைக்கப்பட்டிருப்பது பற்றிய தகவலையறிந்து அங்குசென்று பார்த்தபோதே தமது மகனை அடையாளம் கண்டிருக்கின்றனர்.

# புலிகள் பொறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொடர்ந்து இங்கிருந்து போனவர்கள் வெறுங்கையுடன் திரும்பினர்.

ஆனால், ஏ-9 பாதையைப் புலிகள் மூடிவிட்டனர் என்று இங்குவந்து ஊடகங்களுக்கு அறிக் கைவிட்டனர்.

உண்மையில் விடுதலைப் புலிகள் ஏ-9 பாதையை மூடவில்லை. அரசு தரப்பினரின் இந்த அறிவிப்புக்குத் திருத்தம் ஒன்றை வெளியிட விரும்பிய விடுதலைப் புலிகள், "ஏ-9 பாதையை மூடுமாறு கோரிக்கை விடப்பட்டபோதிலும் அதனைத் தாங்கள் மூடவில்லை" - என்று அறிவித்தனர். இதனடிப்படையில், விடுதலைப் புலிகள் கடைப்பிடிக்கும் நிலைப்பாட்டை நாம் மீண்டும் பாராட்டுகின்றோம்.

சமாதான நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடத்தமுடியாது என்று பிரதமர் தெரிவிப்பது திருப்திகரமற்ற நடவடிக்கையாகும். கடந்த காலத்திலே பல குறைபாடுகள் காணப்பட்டபோதிலும் சமாதான முயற்சிகள் திருப்திகரமாக முன்னெடுக்கப்பட்டு வந்தன.

ஜே.வி.பிக்கும், ஸ்ரீல.சு.கட்சிக்கும் இடையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கூட்டணி சமாதான நடவடிக்கைகளுக்கு எதிரான அமைப்பு அல்ல. நாட்டின் சகல சமூகத்தவரினதும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கென இக்கூட்டமைப்பு அர்ப்பணிப்புடன் செயற்படும்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

# வடக்கு - கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மக்களின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதற்கு எப்படி புரிந்துணர்வுடன் செயற்படுவது என்பது குறித்துப் பேசினோம்.

இன்று நடந்தது ஆரம்பப் பேச்சுக்கள்தான். மலையகத்தில் உள்ள ஏனைய தமிழ் அமைப்புக்கள் எப்படி வடக்கு - கிழக்கு தமிழ் அமைப்புக்களுடன் சேர்ந்து செயற்படுவது என்பது குறித்து தொடர்ந்து பேசவுள்ளோம். இதற்காக எல்லாத் தமிழ்க் கட்சிகளுககும் அழைப்பு விடுத்திருக்கின்றேன். அவர்களுடன் பேசி சாதகமான முடிவு எடுப்பதுதான் எமது அடுத்த கட்ட நடவடிக்கையாகும்.

சிறுபான்மைத் தமிழ் மக்களின் அரசியல் பலத்தை வெளிக்காட்டும் தேர்தலாக அடுத்த தேர்தல் அமைய வேண்டும் என எதிர்பார்க்கின்றோம். தெற்கில் இனவாத அமைப்புக்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து நாடாளுமன்றத்தில் தமது பலத்தை வெளிக்காட்டும் போது அல்லது இலங்கையின் தலைவிதியைத் தீர்மானிக்கும் சக்தி தமக்குத்தான் இருக்கிறது என நினைக்கும் போது தமிழ் மக்கள் மட்டும் பிரிந்திருப்பதா? சிறுபான்மைத் தமிழ் மக்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்தால் எதிர்கால தலைவிதியைத் தீர்மானிக்கும் சக்தி எமக்கும் உள்ளது என்பதை வெளிப்படுத்த வாய்ப்பு உள்ளது.

- இவ்வாறு அவர் கூறினார்.

தேசாபிமான அமைப்பொன்று அவரைப் பதவி விலகுமாறு கேட்டிருப்பது குறித்து அவரிடம் வினவப்பட்டபோது, 35 லட்சம் தமிழ் மக்களின் நலனுக்காகத் தான் பதவி விலகத் தயார் என்று அமைச்சர் சந்திரசேகரன் பதிலளித்தார்.

வடக்கு, கிழக்கு, மலையகத் தமிழ்க்கட்சிகளை ஒன்றுபடுத்தும் முயற்சி தொடர்பாக பேச்சு நடத்த முன்வருமாறு அவர் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.டி.பி., புளொட் உட்பட சகல தமிழக் கட்சிகளுக்கும் கடிதங்கள். அனுப்பிவைத்திருக்கின்றார்.

# புலமைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ரில் 44 சதவீதத்தினர் சித்தியடைந்துள்ளனர். பரீட்சைக்குத் தோற்றிய 186 மாணவர்களில் 82 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். சுண்டுக்குளி மகளிர் ஆரம்பப் பாடசாலையிலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய 90 மாணவர்களில் 23 பேர் சித்தியடைந்துள்ளனர்.

மாவட்ட ரீதியான வெட்டுப்புள்ளி விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| கொழும்பு, | -123 |
| ஹம்பகா, | -123 |
| கண்டி, | -123 |
| மாத்தறை | -123 |
| மட்டக்களப்பு | -123 |
| வவுனியா | -122 |
| அம்பாறை | -121 |
| யாழ்ப்பாணம் | -118 |
| முல்லைத்தீவு | -118 |
| கிளிநொச்சி | -117 |
| திருகோணமலை | -117 |
| மன்னார் | -116 |

புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகளை பரீட்சைத் திணைக்கள இணையத்தளத்தில் இன்று முதல் பார்வையிடலாமென தெரிவிக்கப்பட்டது.

# அம்பாறை முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பாக விளக்கமளிக்கும் செய்தியாளர் கூட்டத்திலேயே அமைச்சர் ஜயசூரிய இவற்றைத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, தேசிய ஐக்கிய முன்னணி என்பவற்றின் கோரிக்கைகளின் பேரிலேயே அப்பகுதிகளில் நடைபெறவிருந்த தேர்தல்கள் பின்போடப்படவுள்ளன எனவும் அமைச்சர் ஜயசூரிய கூறினார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நீண்ட காலமாக உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் அடுத்தடுத்து பின்போடப்பட்டு வருகின்றன. ஆனால், கிழக்கு மாகாணத்தில் அம்பாறை கரையோரப் பிரதேச முஸ்லிம் பகுதிகளை மட்டும் பிரிந்து பெப்ரவரி மாதத்தில் தேர்தலை நடத்தப்போவதாகத் தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார். இதனை இப்பிரதேசத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ், முஸ்லிம் கட்சிகள் எதிர்த்துள்ளன. இவ்விடயத்தில் அரசின் நிலைப்பாடு என்ன என்று கேட்டபோதே அமைச்சர் அத்தேர்தல் ஒத்திவைக்கப்படுமெனத் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக இக்கட்சிகள் தேர்தல் மறுசீரமைப்புத் தெரிவுக் குழுவின் தலைவர் தினேஷ் குணவர்த்தனவுக்கும் தேர்தல் ஆணையாளருக்கும் கடிதங்களை எழுதியுள்ளன.

அப்பிரதேசத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களின் கருத்துகளுக்கும் கௌரவம் அளிக்க வேண்டும். இது தொடர்பாக நாம் தேர்தல் ஆணையாளரிடம் கலந்துரையாடியபோது, அப்பிரதசத்தில் மட்டும் நடத்தவிருந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலைப் பின்போடுவதற்கும் அவர் இணக்கம் தெரிவித்துள்ளார் எனவும் அமைச்சர் கரு ஜயசூரிய கூறினார். (ம-4)

# உயர் நீதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வகித்தமைக்கு மூன்று தடவைகள் சத்தியப் பிரமாணம் செய்துள்ளமை பற்றிய வரைவிலக்கணத்தைத் தெரிவிக்குமாறு மனுதாரர் கோரியுள்ளார்.

சட்டத்தரணி தர்மதாஸ தாக்கல் செய்துள்ள இந்த மனுவில் ஜனாதிபதியின் பதவிக்காலம் எதுவரை தொடரும் என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

**அருள் கொமினிகேஷன்**
இல. 01, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்
உடனுக்குடன் பெற்றுக்கொள்ளலாம். T.P.: 3536 (27570)

**அறிவித்தல்**
கல்வியாண்டு 2003 இல் கற்கை நெறியினைப் பூர்த்தி செய்து கொண்ட மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் 05.02.2004 (வியாழக்கிழமை) நிறுவனதின விழாவில் நடைபெறவுள்ளது. மேற்படி மாணவர்கள் 30.01.2004 இற்கு முன்னதாக எமது அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தங்கள் வரவினை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.
இயக்குநர்,
(C-32599) IIS, யாழ்ப்பாணம்.

**நியூ சயன்ஸ் அக்கடமி**
நெல்லியடி
A/L - 2005, 2006
கணித, உயிரியல்
புதிய பிரிவு ஆரம்பம். (27551)

**Lingam master - swiss**
சுவிஸ் வாழ் தமிழர்களின் முன்னணி ஆசிரியர்
Deutsch - பெரியவர்களுக்கு
Deutsch - பாடசாலை மாணவர்களுக்கு
தொடர்பு:
062 7974164 - 079 3344733,
4665 Oftringen - swiss. (26642)(36-14-16)

**VACANCY**
TYPE SETTER (COMPUTER)
HARD WARE TECHNICIAN (COMPUTER)
SKY ELECTRONIC SYSTEM
01^c, STANLY ROAD,
JAFFNA.
நேரில் வரவும் - ராஜா தியேட்டருக்கு அருகில்
021 222 5349 (C-32875)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இரஞ்சிதமலர் சோமசுந்தரம்

மேற்படி 23.01.2004 இல் 'உதயன்' பத்திரிகையில் 15ஆம் பக்கத்தில் வந்த மரண அறிவித்தலுக்கு அமைய -

அன்னாரின் பூதவுடல் இன்று (24.01.2004) சனிக்கிழமை காலை 9 மணி முதல் அஞ்சலிக்காக பொரளை ஜெயரத்தின மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு 25.01.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு தகனக்கிரிகைக்காக கனத்தை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*33A1/1, 33 ஆம் ஒழுங்கை,*
*வெள்ளவத்தை.* (சி-32910)(36-11-18)
தகவல்:
கணவர், பிள்ளைகள்.

## செல்வி நல்லையா பிரமிளா

சிறுப்பிட்டி மேற்கைச் சேர்ந்த செல்வி நல்லையா பிரமிளா நேற்று (23.01.2004) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சிறுப்பிட்டி மேற்கைச் சேர்ந்த தம்பிராசா நல்லையா - காலஞ்சென்ற நேசமலர் ஆகியோரின் அன்பு மகளும் கல்யாணி (லண்டன்), கமலராசன் (லண்டன்), சசிமலர் (அச்செழு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் நிமலன் (லண்டன்), சோமேஸ்வரன் (அச்செழு) ஆகியோரின் மைத்துனியும் யதுஷனின் சித்தியும் நீர்வேலி தெற்கு இரத்தினம் பராசக்தியின் பேர்த்தியும் சுன்னாகம் வீதி, ஈவினையைச் சேர்ந்த வைத்திலிங்கம் - சின்னத்துரை தம்பதிகளின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2004) சனிக்கிழமை பி.ப3 மணியளவில் சுன்னாகம் வீதி, ஈவினையில் 'உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் குடும்ப மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நிலாவரை மேற்கு,சுன்னாகம் வீதி,*
*ஈவினை.* (27571)(11-18)
தகவல்:
K.T.இராஜசிங்கம்
(பெரிய தந்தை).

## பொன்னையா சரஸ்வதி (பூபதி)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் மாகியப்பிட்டி, சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னையா சரஸ்வதி அவர்கள் காலமானார்.

அன்னார் சறோயினி, விமலாதேவி, கமலாதேவி, தனபாலசிங்கம், ஜெயபாலசிங்கம், கெங்காதேவி, சகுந்தலாதேவி, காலஞ்சென்ற ஸ்ரீபாலசிங்கம் ஆகியோரின் தாயாரும் சோமசுந்தரம் துரைராஜா, ராதா, ஜெயராஜ், சுரேன், செந்தில்வேல்நாயகி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கட்டுவன் வீதி, மல்லாகத்தில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் ஏழாலை இந்து மயானத்திற்கு பிற்பகல் 4 மணியளவில் எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கட்டுவன் வீதி,*
*மல்லாகம்.* (27572)(11-18)
தகவல்:
பொ.தனபாலசிங்கம் (சாரதி)
(கட்டடத் திணைக்களம், யாழ்ப்பாணம்).

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.01.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.